613

பூந்தமிழ் வாசகம்

3

613
613
ப. 52
613
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 DEC 1952
MADRAS

TB
031(3)
N52
130239

வெங்கடராமன் கம்பெனி

பப்ளிஷர்ஸ் :: கும்பகோணம்

பூந்தமிழ் வாசகம்

மூன்றும் புத்தகம்

வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியார்
அர்ச். சூசையப்பர் கல்லூரி உயர்நிலைப் பள்ளி
திருச்சிராப்பள்ளி

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் :: கும்பகோணம்

பதிவுசெய்தது] விலை 7 அணா

First Edition : November 1952

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
1302.39
★ சென்னை-600 008. ★

பெயர் : ....

வகுப்பு : ....

பாடசாலை : ....

ஊர் : ....

TB
031 (3)
N52

ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ், கும்பகோணம்

முன்னுரை

அரசியலார் வெளியிட்டுள்ள புதிய பாட இயலை முற்றிலும் தழுவி அமைக்கப்பெற்றதாகும் இப்புத்தகம்.

இளஞ் சிறுவர்களுக்கு இன்பமளிக்கும் முறையில் படங்கள், கதைகள், குழந்தைப் பாட்டுக்கள், மௌன வாசிப்பு, நடித்தல், விடுகதைகள் இவற்றின் மூலம் தாய்மொழியில் **உரையாடல், படித்தல், எழுதுதல்** என்ற முப்பயிற்சியும் அளிக்குமாறு இச் சிறு நூலில் பாடங்கள் தரப்பட்டுள்ளன.

சிறுவர்களுக்கு விளங்காத அரும்பதங்களை விலக்கி, பெரும்பாலும் அவர்களது பேச்சுப் பழக்கத்திலுள்ள சொற்களைக்கொண்டே இப்புத்தகத்தில் பாடங்கள் அமைக்கப்பட்டு, படிப்படியாக அதிகச் சொற்கள் கற்பிக்கப் படுகின்றன. அவர்களது சுய முயற்சியைத் தூண்டும் பொருட்டு, புதுமுறைப் பயிற்சிகள் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அளிக்கப்பட்டுள்ளன.

ஆதாரக் கல்வித் திட்டத்திற்கிணங்க, சிறு தொழிற் பயிற்சிப் பாடங்களும், செய்முறைப் பயிற்சிகளும் இந் நூலில் இடம்பெற்றுள்ளன.

சீரிய முறையில் தொகுக்கப்பட்டுள்ள இப் **பூந்தமிழ் வாசகம்** எங்கும் நிலவி, இளஞ்சிறுர்க்கு நற்பயன் அளிக்கும் வண்ணம் தமிழன்னை இன்னருள்புரிவாளாக !

திருவானைக்கா
10-11-1952

தி. சி. குழந்தைவேலன்

பொருளடக்கம்

எண்	பாடம்	பக்கம்
1.	படம் படித்தல்	 1
2.	கண்ணனும் கமலமும்	 3
3.	**முரசு** (பாட்டு)	 6
4.	ஒற்றுமையின் உயர்வு	 8
5.	விளம்பரங்கள்	 13
6.	எங்கள் வீடு	 15
7.	கதையும் படமும்	 19
8.	**கூண்டுக் கிளி** (பாட்டு)	 23
9.	வீட்டுச் சாமான்கள்	 25
10.	எறும்பு	 28
11.	மாய வாத்து I	 32
12.	மாய வாத்து II	 36
13.	படித்துச் செய்	 40
14.	துப்புரவு	 41
15.	**பழையமுதும் காப்பியும்** (பாட்டு)	 45
16.	பேசுதல் : படித்தல் : எழுதுதல்	 47
17.	கம்பர்	 51
18.	காய்கறித் தோட்டம்	 54
19.	பாரி வள்ளல்	 61
20.	தினத்தாள் செய்தி	 65

21. பதினெட்டாம் பெருக்கு 67
22. தம்மை மறந்த மூடர்கள் 71
23. கடிதங்கள் 75
24. பள்ளிக்கூட விளையாட்டுகள் 78
25. வீரர் சிதம்பரம் பிள்ளை 82
26. வீர பாண்டிய கட்டபொம்மன் (நாட்டுப் பாடல்) 86
27. தொழில் செய்தல் 87
28. கைத்தொழில் (பாட்டு) 92

கொன்றை வேந்தன் 93

1. நாளை நாளை 94
2. மெய் : பொய் 94
3. தாய்மொழி வாழ்த்து 94


குழந்தை
தாயார்
தகப்பனார்
அக்காள்
தம்பி
அண்ணன்
தங்கை

பூந்தமிழ் வாசகம்

மூன்றும் புத்தகம்

1. படம் படித்தல்

படத்தைப் பார். அதில் யார் யார் இருக்கிறார்கள்? தாயார், தகப்பனார், அண்ணன், அக்காள், தம்பி, தங்கை, குழந்தை இவர்களைப் பார்க்கிறோம்.

அண்ணன் பெயர் கண்ணன். அவன் பாடம் படிக்கிறான். அக்காள் பெயர் கமலம். தகப்பனார் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். தாயார் இடுப்பில் குழந்தையை வைத்துக்கொண்டு நிற்கிறாள். தம்பியின் பெயர் மணிவாசகன். தங்கையின் பெயர் சரோஜினி. இவர்கள் ரயில்வண்டியை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

கண்ணன் கமலத்தைவிடப் பெரியவன். மணிவாசகன், சரோஜினி இவர்களைவிடக் கமலம் பெரியவள்.

படத்தில் நாற்காலி, ரேடியோ இவை களைக் காட்டு.

பயிற்சி

1. தெரிந்துகொள் :

தகப்பனர் —	தாயார்	பாட்டனர்	— பாட்டி
அண்ணன் —	அக்காள்	மாமன்	— மாமி
தம்பி —	தங்கை	மகன்	— மகள்

அம்மா=தாயார்=அன்னை
அப்பா=தகப்பனர்=தந்தை

2. **கேள்விகள் :**

1. உன் பெயர் என்ன ?
2. உனக்கு அண்ணன் இருக்கிருனு ?
அவன் பெயர் என்ன ?
3. உனக்குத் தம்பி இருக்கிருனு ?
அவன் பெயர் என்ன ?
4. உனக்கு அக்காளும், தங்கையும் உண்டா ?
5. உன் குடும்பத்தில் யார் யார் இருக்கிருர்கள் ?

3. கோடிட்ட இடங்களை நிரப்பு :

(1) அண்ணன் — விடப் பெரியவன்.
(2) தங்கை — விடச் சிறியவள்.
(3) குழந்தை தாயாரின் — இருக்கிறது.
(4) என் தகப்பனரின் அக்காள் எனக்கு —.
(5) என் தாயாரின் அண்ணன் எனக்கு —.

2. கண்ணனும் கமலமும்

படத்தைப் பார். படத்தில் காணும் கண்ணன் என்ன செய்கிறான்? கமலம் என்ன செய்கிறாள்? கண்ணன் கன்றுக்குட்டிக்குத் தண்ணீர் காட்டுகிறான். கமலம் பறவைகளுக்குத் தானியங்களைப் போடுகிறாள்.

கண்ணனின் தங்கை கமலம். இவர்களுடைய தாய் தந்தையர் இவர்களைச்

செல்வமாக வளர்த்துவருகிறார்கள். இவர்கள், தங்கள் பெற்றோருக்கு அடங்கி, அவர்கள் சொல்லுகிறபடி நடக்கும் நல்ல பிள்ளைகள்.

கண்ணன் கூர்மையான அறிவு உடையவன்; தைரியம் உள்ளவன். இவன் நாள் தோறும் தனது அலுவல்களைச் சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்புடன் செய்வான்; தன் பாடங்களைக் கருத்துடன் படிப்பான்; மாலையில் உற்சாகத்தோடு விளையாடுவான். கண்ணன் எப்பொழுதும் உண்மையே பேசுவான்; எடுத்த காரியத்தை இடையில் விடாமல் செய்து முடிப்பான்; பிறர் பொருளுக்கு ஆசைப்பட மாட்டான். கண்ணனை நல்லொழுக்கம் உள்ள ஒரு சிறு வீரன் என்று சொல்லலாம்.

கமலம் ஒரு நல்ல பெண். இவள் அதி காலையில் எழுந்து, தனது தாய்க்கு உதவி செய்வாள். வீட்டிலுள்ள பாத்திரம் பண்டங்களைச் சுத்தமாக விளக்கிவைப்பாள். இவளுக்கு முருகன் என்ற ஒரு தம்பி உண்டு. அவன் கைக்குழந்தை. கமலம் முருகனுக்கு விளையாட்டுக் காட்டி அவனை அழாமல் வைத்துக் கொள்ளுவாள்; தொட்டில் ஆட்டுவாள்;

குழந்தைப் பாட்டுக்கள் பாடுவாள். பிறகு கமலம் தன் பாடங்களைப் படிப்பாள்; கணக்குப் போடுவாள். இவளுக்குக் கோலம் போடுவதிலும், பின்னல் பின்னுவதிலும் மிகவும் விருப்பம்.

கண்ணனும் கமலமும் எப்பொழுதும் தங்கள் உடம்பையும் உடையையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுவார்கள்; சிரித்த முகத்துடன் எல்லோரிடமும் மரியாதையாகப் பழகுவார்கள்; இனிமையாகப் பேசுவார்கள். ஆகையால், இவர்களிடம் எல்லோரும் அன்பாய் இருப்பார்கள்.

பயிற்சி

1. கீழ்க்கண்டவிதம் கற்பலகையில் கோடு போட்டு, உன்னைப்பற்றிய குறிப்புக்களை எழுது:

உன் பெயர் :..

தகப்பனார் பெயர் :...

வீட்டு விலாசம் :..

பாடசாலையின் பெயர் :...

படிக்கும் வகுப்பு :..

2. கமலம் தாயாருக்கு எவ்விதங்களில் உதவி செய்வாள்?
3. முருகனுக்குக் கமலம் என்ன செய்வாள்?
4. கண்ணன், கமலம் இவர்களிடம் ஏன் எல்லோரும் அன்பாக இருப்பார்கள்?
5. கண்ணனை ஒரு சிறு வீரன் என்று ஏன் சொல்லலாம்?

3. முரசு (பாட்டு)

1. ஒற்றைக் குடும்பந் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை ;
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை.

2. ஏவல்கள் செய்பவர் மக்கள் ;—இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ ?
மேவி அனைவரும் ஒன்றாய்—நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

3. வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை.
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.

4. ஒன்றென்று கொட்டு முரசே—அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே
நன்றென்று கொட்டு முரசே—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

— **அமரகவி பாரதியார்**

பயிற்சி

1. சொல் வளம் :

முரசு = பேரிகை, டமாரம்.
கருமங்கள் = அலுவல்கள். மனை = வீடு.
மக்கள் = குழந்தைகள். மேவி = பொருந்தி.
வண்ணங்கள் = நிறங்கள். மானுடர் = மனிதர்.
காணீர் = காணுங்கள். நானிலம் = பூமி.
மாந்தர் = மனிதர்.

2. கேள்விகள் :

1. ஒரு குடும்பத்திலுள்ள தகப்பனார் என்ன செய்கிறார்? தாயார் என்ன செய்கிறாள்? மக்கள் என்ன செய்வார்கள்?
2. மானுடர்கள் எவைகளில் வேற்றுமைப்படுகிறார்கள்? எவைகளில் ஒத்து இருக்கிறார்கள்?
3. மனிதருக்குள் எது ஓங்கவேண்டும்?

4. ஒற்றுமையின் உயர்வு

[இந்தக் கதையை மௌனமாகப் படி. புத்தகத்தை மூடு. கதையைச் சொல்.]

நல்லூர் என்ற ஊரில் நாகன் என்ற வேளாளன் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவனுக்கு நான்கு மக்கள் இருந்தார்கள். அவர்கள் நால்வரும் தங்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் அடிக்கடி சண்டையிட்டுவந்தனர். நாகன் தன் பிள்ளைகளுக்கு எவ்வளவுதான் நல்லுரை கூறினாலும் அவர்கள் கேட்பதில்லை. அதனால், நாகன் மிகவும் மனம் வருந்தினான்.

பிற்காலத்தில் தன் மக்கள் ஒற்றுமையில்லாமல் கெட்டுவிடுவார்களே என்ற கவலை அவன் மனத்தை வருத்தியது.

ஒரு நாள் நாகன் தன் மைந்தர்கள் நால்வரையும் அருகில் அழைத்தான். ஒவ்வொருவரையும் தனித்தனியே விறகுச் சுள்ளிகளைப் பொறுக்கி, கட்டாகக் கட்டி, கொண்டுவரும்படி கூறினான். அவ்வாறே அவர்கள் நால்வரும் நான்கு சுள்ளிக்கட்டுகள் கொண்டுவந்தனர்.



பிறகு, நாகன் தன் மக்களைப் பார்த்து, அவரவர் கொண்டுவந்த சுள்ளிக் கட்டை

எடுத்து, அதை இரண்டாக முறிக்கும்படி சொன்னான். ஒவ்வொருவனும் தன் தன் கட்டை எடுத்து முறித்துப் பார்த்தான்; முறிக்க முடியவில்லை.



பின்பு நாகன் சுள்ளிக்கட்டு ஒன்றை அவிழ்த்து, பேருக்கு ஒரு சுள்ளியாகக் கொடுத்து ஒடிக்கும்படி உரைத்தான். உடனே அவர்கள் ஒவ்வொன்றையும் எளிதில் ஒடித்து விட்டனர்.

முடிவில் நாகன் தன் பிள்ளைகளைப் பார்த்து, "அருமை மக்களே! விறகுச் சுள்ளிகள் ஒன்ருகச் சேர்ந்து கட்டாக இருந்தபொழுது உங்களால் ஒடிக்க முடிந்ததா? தனித்தனியாகப் பிரிந்த பொழுதுதானே அவற்றை ஒடிக்க முடிந்தது! அதுபோல, நீங்கள் நால்வரும் ஒற்றுமையாகக் கூடி வாழ்ந்தால் உங்களை யாரும் ஒன்றும் செய்யமுடியாது அல்லவா? ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கிஞல் நம் அனைவர்க்கும் தாழ்வே நேரிடும்" என்று புத்தி புகட்டினன்.

அதுமுதலாக, மைந்தர்கள் நால்வரும் ஒற்றுமையாக வாழ்ந்துவரலாயினர். அதனைக் கண்ட தந்தையாகிய நாகனும் மனம் மகிழ்ந்தான்.

பயிற்சி

I. படம் படித்தல்:

1. முதல் படத்தில் யார் யார் இருக்கிருர்கள்? கீழே என்ன கிடக்கின்றன?
2. இரண்டாவது படத்தில் மைந்தர்கள் என்ன செய்கிருர்கள்? மூன்ருவது படத்தில் நீ காண்பது என்ன?

2. சொல் வளம் :

மக்கள் = மைந்தர்கள் = பிள்ளைகள்.
கூறினான் = உரைத்தான் = சொன்னான்.
வேளாளன் = பயிர்வேலை செய்பவன் = குடியானவன்.
நல்லுரை = புத்திமதி.
ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று; தனி + தனி = தனித்தனி

3. வினாக்கள் :

1. நாகன் தனது மக்களைப்பற்றி ஏன் கவலை கொண்டான் ?
2. விறகுச் சுள்ளிகளை எப்பொழுது முறிக்க முடிய வில்லை ? எப்பொழுது முடிந்தது ?
3. கதையிலிருந்து என்ன தெரிந்துகொள்ளுகிறாய் ?

4. **நாகனுக்கு நான்கு மக்கள் இருந்தார்கள்.**

இது ஒரு **வாக்கியம்** ஆகும். வாக்கியத்தின் முடிவில் **முற்றுப்புள்ளி** இருப்பதைக் கவனி.

பின்வரும் சொற்களைப் பொருள் விளங்கும்படி மாற்றி வாக்கியமாக எழுது:

1. உண்டு வாழ்வு ஒன்று பட்டால்.
2. இருந்தான் நல்லூரில் வேளாளன் நாகன் என்ற.
3. இட்டலி குடித்தான் நீர் மோர் தின்று.
4. புல் பசித்தால் புலி தின்னுமா ?

5. விளம்பரங்கள்

I

வாருங்கள் ! பாருங்கள் !

குடந்தை நகர மன்றத்தின் ஆதரவில்
மாசி மகத் திருவிழாவை முன்னிட்டு
அரண்மனைத் தோட்டத்தில்

19—2—1953 முதல் 7—3—1953 வரையில்

பொருட்காட்சி நடைபெறும்.

அனைவரும் வாருங்கள் ! கண்டு களிகூருங்கள் !!
அறிவுவளர்ச்சி பெறுங்கள் !!!

குறிப்பு : ஒவ்வொரு நாள் மாலையிலும் இன்னிசைக் கச்சேரிகள் நடத்தப்படும்.

பயிற்சி

1. சொல்வளம் :

விளம்பரம் - அறிவிப்பு; குடந்தை - கும்பகோணம்; நகர மன்றம் - நகராட்சிச் சபை, முனிசிபாலிடி; திருவிழா - உற்சவம்; இன்னிசைக் கச்சேரி - பாட்டுக் கச்சேரி; களிகூருங்கள் - மகிழ்ச்சியடையுங்கள்.

பொருள் + காட்சி = பொருட்காட்சி.

2. வினாக்கள் :

1. பொருட்காட்சி ஏன் திருவிழாக் காலத்தில் நடத்தப்படுகிறது ?
2. மேற்கூறிய பொருட்காட்சி எந்த ஊரில் நடைபெறும் ? எந்த இடத்தில் ?
3. யாரால் நடத்தப்படுகிறது ?
4. மாலையில் சிறப்பாக நடைபெறுவது என்ன ?

3. இந்த விளம்பரச் செய்தியை உன் பெற்றோரிடம் சொல்.

II

பஞ்சாயத்துச் சபைத் தேர்தல்

16–9–52-ல்

நடைபெறும் தேர்தலில்,
உழைப்பின் அறிகுறியாகிய
மாடு அடையாளமுள்ள பெட்டியில்



தங்கள் வாக்குரிமைச் சீட்டைப் போட்டு
என்னை ஆதரிக்க வேண்டுகிறேன்.

பொதுநல ஊழியன், **கதிர்வேலன்**

பயிற்சி

1. உனது ஊரில் தேர்தல் நடந்தது உண்டா?
2. வோட்டுப் பெட்டிகளில் காணப்படும் தேர்தல் அடையாளங்கள் மூன்று சொல்.
3. வோட்டுப் பெட்டிபோல் படம் எழுது.

6. எங்கள் வீடு



இது எங்கள் வீடு. இதில் நானும், என் பெற்றோரும், சகோதரர்களும் . சேர்ந்து குடும்பமாக வசிக்கிறோம். இந்த வீடு எங்கள் சொந்த வீடு.

வெயில் படாமலும் மழையில் நனையாமலும் நாம் தங்கியிருக்க நமக்கு வீடு வேண்டும். நமது பொருள்களைத் திருட்டுப் போகாமல் வைத்துக்கொள்ளவும் வீடு பயன்

படுகிறது. வீட்டில் நாம் விளையாடுகிறோம்; படிக்கிறோம்; சாப்பிடுகிறோம்; தூங்குகிறோம். வீடு இல்லாவிட்டால் நாம் பலவகைகளில் துன்பப்படுவோம் அல்லவா?

எங்கள் வீடு செங்கல் வீடு. வீட்டின் முன் பக்கத்தில் திண்ணையும் வாசற்படியும் இருக்கின்றன. உட்புறத்தில் ஒரு பெரிய முற்றமும், முற்றத்தைச் சுற்றித் தாழ்வாரங்களும் இருக்கின்றன. முன் தாழ்வாரத்தின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பெரிய அறைகள் உண்டு. ஓர் அறையில் நாற்காலிகளும், மேசையும் உள்ளன. புத்தகங்கள் அடுக்கிய ஓர் அலமாரியும் இருக்கிறது. தகப்பனாரைப் பார்க்க வருவோர் இந்த அறையில் அமர்ந்து பேசுவர். இன்னொன்று படுக்கை அறை. பக்கத்துத் தாழ்வாரங்களை அடுத்து நீண்ட கூடங்களும், சமையல் அறையும், சாமான் அறையும் இருக்கின்றன.

வீட்டின் பின்புறத்தில் கிணறும், காய்கறித் தோட்டமும், மாட்டுக்கொட்டிலும் இருக்கின்றன.

எங்கள் வீடு சுகாதாரத்திற்கு ஏற்றது. அது மேடான இடத்தில் கட்டப்பட்டிருக்கிறது.

வெளிச்சமும் காற்ருேட்டமும் வருவதற்குப் பெரிய சன்னல்கள் வைக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளை நாங்கள் எப்பொழுதும் திறந்துவைப்போம்.

நாங்கள் சுகமாய் வாழும்பொருட்டு எங்கள் வீட்டையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ளுகிருேம். ஒவ்வொரு சாமானையும் வைக்க ஓர் இடம் உண்டு. சாமான்களை அந்தந்த இடத்திலேயே தவருமல் வைப்போம். வீட்டைத் துப்புரவாக வைத்திருக்க நாங்கள் ஒவ்வொருவரும் பாடுபடுகிருேம்.

பயிற்சி

1. படம் படித்தல் :



இந்தப் படத்தைப் படி. இதில் காட்டியுள்ள வீட்டின் பாகங்களின் பெயர்களை எழுது.

2. சொல்வளம் :

சகோதரர் = உடன்பிறந்தவர்
தூய்மை = துப்புரவு = சுத்தம்
பெற்றோர் தாய்தந்தையர்

தெரிந்துகொள் :

அறை = வீட்டின் அறை; அரை = பாதி.
கரி = அடுப்புக் கரி ; கறி = காய்கறி.

3. கேள்விகள் :

1. நமக்கு ஏன் வீடு வேண்டும் ?
2. சாதாரணமாக வீட்டின் பின்புறத்தில் என்ன என்ன இருக்கும் ?
3. வீட்டின் உட்புறத்திலுள்ள பாகங்கள் எவை ?
4. வீட்டில் சன்னல்கள் எதற்காக வைக்கப்படுகின்றன?

4. இந்த வீடு எங்களுக்குச் சொந்தமானது.

இந்த வாக்கியத்தில் நான்கு **சொற்கள்** இருக்கின்றன. **வீடு,**—இந்தச் சொல்லில் **வீ, டு** என்ற இரண்டு **எழுத்துக்கள்** இருக்கின்றன. எழுத்துக்கள் பல சேர்ந்து **சொல்** ஆகும்.

1. பின்வரும் சொற்களை ஒரு எழுத்துச் சொல், இரண்டு எழுத்துச் சொல், மூன்று எழுத்துச் சொல், பல எழுத்துச் சொல் என்று பிரித்து எழுது :

பார், பூ, தம்பி, குழந்தை, கண்ணன், பெயர், படி, கை, தகப்பனார், வசிக்கிறோம், பாடுபடுகிறோம், பை, கல்.

2. இந்த எழுத்துக்களைச் சொற்களாக அமை :
றுணகி; சல்னன் ; கங்செல் ; ம்பகுடும்.

7. கதையும் படமும்

இந்தப் படத்தில் காகம் ஒன்று பறந்து வருகிறது. அது தாகத்தினல் களைத்திருக்கிறது. அது நீரைத் தேடி அலைந்தது. வெயில் காலம் ஆனதால் நீர் நிலைகள் வற்றிப் போயிருந்தன. ஓரிடத்திலும் தண்ணீர் அகப்படவில்லை.

காகம் இளைப்பாறும்பொருட்டு ஒரு வீட்டின் கூரையில் உட்கார்ந்தது. தரையில் ஒரு கண்ணுடிச் சாடி இருந்தது. அதன் அடியில் தண்ணீர் சிறிதுஇருப்பதைக் கண்டது. காக்கையின் அலகுக்கு அந்தத் தண்ணீர் எட்டவில்லை. அதனுல் அது ஏக்கம் கொண்டது.

அப்பொழுது அது ஒரு தந்திரம் செய்தது. கீழே சில சிறு கற்கள் கிடந்தன. காகம் அவைகளை அலகினால் ஒவ்வொன்றாகக் கொத்தி எடுத்து, சாடிக்குள் போட்டது.

கற்களைப் போடப் போட நீர் மட்டம் மேலே எழுந்தது. தண்ணீர் மேலே வந்ததும் காகம் நீரைக் குடித்தது; தாகமும் தணிந்தது; பிறகு மகிழ்ச்சியுடன் பறந்துபோயிற்று.

" முயற்சியுடையார்
இகழ்ச்சி அடையார். "

பயிற்சி

1. சொல்வளம் :

ஏக்கம் = கவலை. நீர் நிலைகள் = குளம், குட்டைகள். தந்திரம் = யுக்தி. அலகு = பறவை மூக்கு. இகழ்ச்சி = இழிவு.

2. கேள்விகள் :

1. ஏன் ஓரிடத்திலும் தண்ணீர் அகப்படவில்லை ?
2. சாடியிலிருந்த தண்ணீரைக் காகம் ஏன் முதலில் குடிக்க முடியவில்லை ?
3. காகம் என்ன தந்திரம் செய்தது ?
4. சாடியில் கற்களைப் போடப் போட என்ன நேர்ந்தது?

3. கதை சொல்லல் :

இந்தக் கதையை உன் தம்பிக்குச் சொல்.

4. தமிழ் எழுத்துக்கள் :

ஒன்று,— இதில் **ஒ, ன், று** என மூன்று எழுத்துக்கள் இருக்கின்றன.

ஒ—இது **உயிர் எழுத்து** எனப்படும்.

ன்—இது மெய் எழுத்து எனப்படும்.

று (ற்+உ)—இது **உயிர்மெய் எழுத்து** எனப்படும்.

அ, ஆ, இ, ஈ, உ, **ஊ,** எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—என **உயிரெழுத்துக்கள் 12** ஆகும்.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—என **மெய்யெழுத்துக்கள் 18** ஆகும்.

க, கா முதலிய எழுத்துக்கள் **உயிர்மெய் எழுத்துக்கள்** ஆகும். இவை **216.**

எஃகு—இதில் **ஃ ஆய்த எழுத்து** எனப்படும்.

ஆகவே, தமிழில் நான்கு வகை எழுத்துக்கள் இருப்பதைக் கவனியுங்கள்.

தமிழ் எழுத்துக்களின் வரிசையை அடுத்த பக்கத்தில் காணும் அட்டவணையைப் படித்துத்தெரிந்துகொள்ளுங்கள்.

தமிழ் எழுத்துக்கள்

மெய் 18	உயிர் 12											
	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

8. கூண்டுக் கிளி

சிறுவன் :

பாலைக் கொண்டு தருகின்றேன் ;
பழமும் தின்னத் தருகின்றேன் ;
சோலைக் கோடிப் போகவழி
சுற்றிப் பார்ப்ப தேன் ? கிளியே !

காட்டில் எங்கும் இரைதேடிக்
களைத்திட் டாயோ ? உனக்கிந்தக்
கூட்டில் வாழும் வாழ்வினிலே
குறைக ளேதும் உண்டோ ? சொல்.

கிளி :

சிறையில் வாழும் வாழ்வுக்குச்
சிறகும் படைத்து விடுவானோ?
இறைவன் அறியாப் பாலகனோ?
எண்ணி வினைகள் செய்யானோ?

பாலும் எனக்குத் தேவையில்லை;
பழமும் எனக்குத் தேவையில்லை;
சோலை எங்கும் கூவிநிதம்
சுற்றித் திரிதல் போதும்அப்பா!

— **கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை**

பயிற்சி

1. சொல்வளம் :

i. சோலை = மரங்கள் அடர்ந்த இடம், தோப்பு; இரை = உணவு; சிறை = சிறைச்சாலை; இறைவன் = கடவுள்; பாலகன் = குழந்தை; கூடு = கூண்டு; வினைகள் = செயல்கள்; நிதம் = நாள்தோறும்.

ii. சோலைக்கு + ஓடி = சோலைக்கோடி
பார்ப்பது + ஏன் = பார்ப்பதேன்
உனக்கு + இந்த = உனக்கிந்த
குறைகள் + ஏதும் = குறைகளேதும்

2. கேள்விகள் :

1. கிளிக்குச் சிறுவன் கொடுக்கும் உணவு என்ன?
2. சிறுவன் கிளியைப் பார்த்துக் கேட்ட கேள்வி என்ன?
3. கிளி அதற்கு என்ன பதில் சொல்லியது?

9. வீட்டுச் சாமான்கள்



படத்தில் காணும் சாமான்களைப் பார்.
இவை வீட்டுச் சாமான்கள் ஆகும்.
குதிரில் நெல் இருக்கும்.
கூடையில் நெல்லை அள்ளலாம்.
நெல்லைச் சல்லடையால் சலிக்கலாம்.
உலக்கையால் உரலில் நெல் குத்தலாம்.
நெல்லைக் குத்தி அரிசி எடுக்கலாம்.
முறத்தால் அரிசியைப் புடைக்கலாம்.
ஏந்திரத்தால் மாவு அரைக்கலாம்.
ஆட்டுக் கல்லில் இட்டலி மாவு அரைக்கலாம்.

தாயார் அடுப்பில் நெருப்பு மூட்டுவாள்.

பானையில் சாதம் சமைப்பாள்.

சட்டியில் குழம்பும் ரசமும் செய்வாள்.

அம்மியில் துவையல் அரைப்பாள்.

குடத்தில் தண்ணீர் மொண்டு வருவாள்.

தவலையில் வெந்நீர் போடுவாள்.

அகப்பைக் கூட்டில் கரண்டிகள் வைக்கலாம்.

விளக்கு வெளிச்சம் தரும்.

பயிற்சி

1. சொல்வளம் :

i. காலி இடங்களை நிரப்பு :

சட்டியில் குழம்பும் ——— செய்வாள்.
குதிரில் ——— வைத்திருக்கும்.
முறத்தால் அரிசியைப் ——— .
பெட்டியில் ——— வைக்கலாம்.

ii. தெரிந்துகொள் :

பானை மண்ணால் செய்யப்படுகிறது.
அம்மி கல்லால் செய்யப்படுகிறது.
குடம் பித்தளையால் செய்யப்படுகிறது.
உரல் மரத்தால் செய்யப்படுகிறது.
கூடை மூங்கிற் சிம்புகளால் செய்யப்படுகிறது.

2. கேள்விகள் :

1. நெல் எதில் வைக்கப்படும் ?
2. சல்லடையின் உபயோகம் என்ன ?
3. மாவு எதனால் அரைக்கிறார்கள் ?
4. முறத்தினால் என்ன செய்யலாம் ?
5. தாயார் சட்டியில் என்ன செய்வாள் ?
6. துவையல் எதில் அரைப்பாள் ?
7. கரண்டிகளை எதில் மாட்டி வைக்கலாம் ?

3. படங்களில் காணும் சாமான்களின் பெயர்களை எழுது.

4. உரல்,—ஒரு பொருளின் பெயர்.

குதிர், முறம், சல்லடை, நெல், குடம், சட்டி இவை பொருள்களின் பெயர்கள். இவை **பெயர்ச் சொற்கள்** எனப்படும். பொருள்களின் பெயர்களைக் குறிக்கும் சொற்கள் **பெயர்ச் சொற்கள்.**

இந்தப் பாடத்தில் வந்துள்ள வேறு **10** பெயர்ச் சொற்களை எடுத்து எழுது.

———

10. எறும்பு

நீங்கள் என்னைப் பல இடங்களிலும் பார்த்திருப்பீர்கள். நான் யார் தெரியுமா? நான் தான் சின்னஞ் சிறு எறும்பு. என்னைப்பற்றிய விவரங்கள் உங்களுக்குத் தெரியுமா? சொல்லுகிறேன், கேளுங்கள்.

சிற்றெறும்பு, சுள்ளெறும்பு, கட்டெறும்பு, கூனல் எறும்பு என எங்களில் பலவகை உண்டு. இவைகளைப் பார்த்தறியுங்கள். எங்கள் நிறங்களிலும் வேறுபாடு இருப்பதைக் காண்பீர்கள். உருவத்தில் எங்களில் சில பெரியனவாயும், சில சிறியனவாயும் இருக்கும். சுள்ளெறும்புகள் கடித்தால் அதிகம் கடுக்கும். அவைகளுக்கு அருகில் செல்லாதீர்கள்.

தரையில் துளை தோண்டிக்கொண்டு நாங்கள் அதனுள் கூட்டமாக வாழ்வோம். அந்தத் துளைகளை எறும்புப் புற்றுகள் என்றும் சொல்வார்கள். மரக் கிளைகள், இலைகள் முதலிய வேறு இடங்களிலும் நாங்கள் வசிப்பதுண்டு.

நாங்கள் அரிசி, தின்பண்டம், இறந்து போன சிறு ஜந்துக்கள் முதலிய பல பொருள்களையும் தின்போம். இனிப்பான வெல்லம், சர்க்கரை என்றால் எங்களுக்கு அதிகக் கொண்டாட்டம். அவை இருக்குமிடத்தை மோப்பத்தால் தெரிந்துகொண்டு அங்குச் செல்வோம். மாரிக்காலத்துக்கு வேண்டிய உணவுப்பொருள்களைக் கோடைக்காலத்திலேயே எங்கள் புற்றில் சேகரித்து வைத்துக் கொள்வோம்.

நாங்கள் பூச்சி இனத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் உடலமைப்பில் தலை, மார்பு, வயிறு என்ற மூன்று பகுதிகள் உண்டு. மார்பின் அடிப்புறத்தில் ஆறு கால்கள் உள. எங்களுக்கு இறக்கைகள் இல்லை. கறையான்களும், ஈசல்களும் எங்கள் இனத்தைச் சேர்ந்தவையே. ஆனால் ஈசல்களுக்குமட்டும் இறக்கை உண்டு.

எங்களுடைய இரண்டு கண்களும் பல சிறு கண்கள் சேர்ந்து அமைந்தவை. ஆதலால் தலையைத் திருப்பாமலே நாலா பக்கமும் பார்க்கமுடியும். எங்களுக்குச் சிறு பற்கள் உண்டு. அவை பதார்த்தங்களைக் கடிப்பதற்கு ஏற்றவை.

நாங்கள் பிறந்து வளர்வது ஒரு விந்தையே. நாங்கள் சிறிய வெண்மையான முட்டைகள் இடுவோம். முட்டையிலிருந்து சிறு புழுக்கள் வெளிவரும். புழுக்கள் வளர்ந்து உரு மாறி எறும்புகள் ஆகும்.

நாங்கள் அற்ப பிராணிகளேயானாலும் எங்களிடம் சில நற்பழக்கங்கள் உள்ளன. எங்களுக்குச் சோம்பலே தெரியாது; எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே இருப்போம். ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாகச் செல்வோம். நாங்கள் சிறு சமூகமாகக் கூடி வாழ்வோம். எங்களுக்குள் ஒற்றுமை அதிகம். அரிசி முதலிய தானியங்களை இழுத்துச் செல்வதில் நாங்கள் சேர்ந்து ஒத்துழைப்பதைப் பார்த்திருப்பீர்கள். இந்த நற்பழக்கங்களை நீங்களும் பின்பற்றி நலம் பெறுங்கள்.

பயிற்சி

1. எறும்பு தன் கதையைத் தானே சொல்லுவதுபோல் இந்தப் பாடம் அமைந்திருக்கிறது.

2. சொல்வளம் :

விந்தை = ஆச்சரியம்

நல் + பழக்கம் = நற்பழக்கம்

சிறு + எறும்பு = சிற்றெறும்பு

சித்திரையும் வைகாசியும் - இளவேனிற்காலம்

ஆனியும் ஆடியும் - முதுவேனிற்காலம்

ஆவணியும் புரட்டாசியும் - முன்மழைக்காலம்

ஐப்பசியும் கார்த்திகையும் - பின்மழைக்காலம்

மார்கழியும் தையும் - முன்பனிக்காலம்

மாசியும் பங்குனியும் - பின்பனிக்காலம்

3. கேள்விகள் :

1. எறும்புகளில் நான்கு வகைகள் சொல்.

2. எறும்பை ஏன் பூச்சி இனத்தைச் சேர்ந்தது என்று சொல்லுகிறோம்?

3. எறும்பின் வாழ்க்கையிலிருந்து நாம் அறிந்து கொள்ளவேண்டிய மூன்று நற்பழக்கங்கள் எவை?

———

11. மாய வாத்து I

ஒரே ஒரு காடு. அந்தக் காட்டுக்கு அருகில் ஒரு கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்திலுள்ள ஒரு குடிசையில் பொன்னம்மாள் தனது இரண்டு மக்களுடன் வாழ்ந்துவந்தாள். மூத்த மகன் பெயர் முனியன்; இளைய மகன் பெயர் இனியன். இவர்கள் நாள்தோறும் காட்டுக்குச் சென்று விறகுகளைச் சேகரித்துக் கொண்டுவருவார்கள். அவற்றை ஊர்ப்புறங்களில் விற்று, அதனுல் கிடைக்கும் பணத்தைக்கொண்டு சீவனம் செய்துவந்தார்கள்.

ஒரு நாள் பொன்னம்மாள் மூத்த மகனை அழைத்து, “முனியா! இதோ சோறும் தண்ணீரும் வைத்திருக்கிறேன். அவற்றை எடுத்துக்கொண்டு காட்டுக்குச் செல். விறகுகள் வெட்டி வா” என்ருள். முனியன், “அப்படியே செய்கிறேன்” என்று சொல்லிக் கட்டுச்சோறு, கோடரி, அரிவாள் இவைகளை எடுத்துக்கொண்டு காட்டை நோக்கிச் சென்ருன்.

முனியன் காட்டை அடைந்ததும், அங்கு வயது முதிர்ந்த ஒரு மனிதன் பாதையில்

படுத்திருந்ததைக் கண்டான். அந்தக் கிழவன் முனியனைப் பார்த்து, "தம்பி! எனக்குப் பசியும் களைப்பும் மேலிட்டிருக்கிறது. உண்ண ஏதாவது கொடு" என்று வேண்டினான். அதற்கு முனியன், "என்னிடமுள்ள உணவு எனக்கே போதாது. ஆதலால், உனக்குக் கொடுக்கமுடியாது" என்று சொல்லிக்கொண்டு வேகமாய் நடந்தான்.

பின்பு முனியன் ஓர் உலர்ந்த மரத்தை வெட்டும்பொழுது கோடரி தவறி அவனுடைய காலில் விழுந்தது. காயம் உண்டாகி இரத்தம் வடிந்தது. வலி அவனால் பொறுக்க முடியவில்லை. அதனால் வீட்டுக்குத் திரும்பிச் சென்றால் போதும் என்ற நிலைமை ஏற்பட்டது. கொண்டு வந்த உணவை அருந்திவிட்டு, விறகு சேகரிக்க முடியாமல் வீட்டிற்குத் திரும்பினான். தாயாரிடம் நிகழ்ந்ததை விவரமாகச் சொன்னான். அன்னை அவனுடைய நிலைமையைப் பார்த்து மிகவும் வருந்தினாள்.

மறுநாள் காலையில் தாயார் இளைய மகனைக் கூப்பிட்டு, "இனியா! இன்றைக்கு நீதான் காட்டுக்குச் சென்று விறகு வெட்டிவரவேண்

டும். கட்டுச்சோறு வைத்திருக்கிறேன். எடுத்துக் கொண்டு போகலாம்" என்று உரைத்தாள்.

அன்னையின் சொற்படி இனியன் காட்டுக்கு ஏகினன். முந்திய நாளைப்போல் அதே இடத்தில் அந்த முதிய கிழவன் படுத்திருந்தான். அவன் இனியனைப் பார்த்து, "நான் பசியினல் களைத்திருக்கிறேன். உண்ண ஏதாவது கொடுத்து உதவிசெய்" என்று வேண்டினன். உடனே இனியன் முக மலர்ச்சியுடன் தான் கொண்டு வந்த உணவைக் கிழவனிடம் கொடுத்தான். அவன் அதை அருந்திக் களைப்பு நீங்கி எழுந்து உட்கார்ந்தான். "எனக்கு உண்டி கொடுத்து உயிர் கொடுத்தாய். தம்பி, நான் ஒன்று சொல்லுகிறேன். அதோ, தொலைவில் ஒரு நாவல் மரம் தெரிகிறது அல்லவா? அதனடியில் தோண்டிப் பார். அங்குக் கிடைப்பதை வீட்டுக்கு எடுத்துச் சென்று சுகமாக வாழ்க" என்று அவன் கூறினன்.

இனியனும் முதியவர் கூறியவாறு நாவல் மரத்தடிக்குச் சென்று தரையைத் தோண்டினன். என்ன விந்தை! பொன் சிறகுகளுடைய வாத்து ஒன்று அங்கே காணப்பட்டது.

பயிற்சி

1. சொல்வளம் :

நிகழ்ந்ததை = நடந்ததை. ஏகினுன் = சென்ருன் = போனுன். உண்டி = உணவு. தொலேவில் = தூரத்தில்.

2. கேள்விகள் :

1. குடிசையில் எவர்கள் வசித்துவந்தார்கள் ?
2. அவர்கள் எவ்விதம் சீவனம் செய்துவந்தார்கள் ?
3. முனியன் காட்டுக்கு எவைகளே எடுத்துச் சென்ருன்?
4. முனியனேப் பார்த்துக் கிழவன் என்ன வேண்டினுன் ? அதற்கு முனியன் என்ன சொன்னுன் ?
5. விறகு இல்லாமல் முனியன் ஏன் வீடு திரும்ப நேர்ந்தது?
6. கிழவன் உணவு கேட்டதற்கு இனியன் என்ன செய்தான் ?
7. கிழவன் இனியனேப் பார்த்து என்ன சொன்னுன்?

3. தெரிந்துகொள் :

ஒன்று	பல	ஒன்று	பல
காடு	காடுகள்	கல்	கற்கள்
குடிசை	குடிசைகள்	நாள்	நாட்கள்
கூடை	கூடைகள்	படம்	படங்கள்
மரம்	மரங்கள்	புத்தகம்	புத்தகங்கள்

12. மாய வாத்து II

இனியன், பொன் சிறகுள்ள வாத்தைக் கண்டதும் மிகவும் வியப்படைந்தான். ‘இது எவ்வளவு அழகான வாத்து!’ என்று மகிழ்ச்சி யடைந்தான். ‘கிழவர் நமக்கு அளித்த பரிசு, பொன்சிறகு வாத்து!’ என்று சொல்லிக் களிப்படைந்தான். பிறகு, அதை எடுத்துக் கையினுல் அணைத்துக்கொண்டு அவன் வீடு நோக்கித் திரும்பினுன்.

வழியில், ஒரு சிறுமி வாத்தின்மீது இருந்த தங்க இறகைக் கண்டதும், அதில் ஒன்றை எடுத்துக்கொள்ள விரும்பி அதைப் பிடித்து

இழுத்தாள். அவளால் கையை எடுக்க முடிய வில்லை. அவள் வாத்தினால் இழுக்கப்பட்டு அதன் கூடவே சென்றாள்.

சிறிது தூரம் சென்றதும் அந்தப் பெண் ணின் அண்ணன் வந்தான். அவன் அவளை விடுவிக்க எண்ணி அவளைத் தொட்டான். அவன் கையும் ஒட்டிக்கொண்டது; எடுக்க முடியவில்லை. அவனும் கூடவே செல்ல நேர்ந்தது.

பின்பு, அவர்களின் தாயார் அங்கே வந்தாள். அவள் அவர்களை விடுவிக்க முயன்றாள். அவளும் தப்புவிக்கமுடியாமல் அவர்களைத் தொடர்ந்து செல்ல நேர்ந்தது. உடனே தகப்பனாரும் அதே விதம் செய்ய, அவரும் பின்தொடர்ந்து செல்ல நேரிட்டது. இந்த வேடிக்கையைத் தெருவில் . சென்றவர் எல்லோரும் பார்த்தார்கள்.

அந்த நாட்டின் அரசனுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவள் பிறந்தது முதல் பேசினதும் இல்லை; சிரித்ததும் இல்லை. அதனால் அரசன் மிகவும் கவலை அடைந்தான். அவளைப் பேசச் செய்கிறவனுக்குத் தன் நாட்டில் பாதியைக் கொடுப்பதாக விளம்பரம் செய்தான்.

சிறுமி, அண்ணன், தாயார், தகப்பனுர் இவர்கள் வாத்தைவிட்டுப் பிரியமுடியாமல், ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டு இனியன் பின் வருவதை அரச குமாரி மாடியிலிருந்து பார்த்தாள்; 'கொல்' என்று சிரித்து, "இது என்ன புதுமை!" என்று பேசத் தொடங்கினுள். அருகில் இருந்தவர்கள் ஓடிப்போய், அதை அரசனுக்குத் தெரிவித்தார்கள்.

இனியன் வாத்தைத் தரையில் வைக்க நேர்ந்தது. உடனே அதைப் பிடித்துக்கொண்டிருந்தவர்கள் விடுபட்டனர். அவர்கள் தங்கள் வீட்டுக்குச் சென்றனர்.

அரசன் தன்னுடைய அருமைப் புதல்வி பேச ஆரம்பித்துப் பலருடன் உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான்; பெருமகிழ்ச்சி கொண்டான். முன்பு விளம்பரம் செய்தபடி அரசன் இனியனுக்குத் தன் நாட்டில் பாதியை அளித்தான். மேலும், அரச குமாரியையும் அவனுக்குத் திருமணம் செய்துவைத்தான். இனியன் மாய வாத்துடனும் அரச குமாரியுடனும் வீடு திரும்பினுன்; தன் தாயாருடனும் அண்ணனுடனும் இனிது வாழ்ந்துவந்தான்.

பயிற்சி

1. சொல்வளம் :

i. முதியவர்=கிழவர். விந்தை = புதுமை, ஆச்சரியம். உரையாடிக்கொண்டிருப்பதை = பேசிக்கொண்டு இருப்பதை. திருமணம் = கலியாணம். இனிது = சுகமாக.

ii. **தெரிந்துகொள் :**

அரச குமாரி **கொல்**லென்று சிரித்தாள்.
தண்ணீர் குபீரென்று வெளிவந்தது.
முருகன் **தொப்**பென்று குதித்தான்.
காது **கும்**மென்று அடைத்தது.
கோயில் மணி **கணீ**ரென்று அடித்தது.

2. கேள்விகள் :

1. படத்தில் காணும் கட்டடம் என்ன ?
   அதன் மாடியில் யார் நிற்கிறார்கள் ?
2. வீதியில் எவர்கள் நடந்துவருகிறார்கள் ?
3. அரசன் தன் மகளைப்பற்றி ஏன் கவலைகொண்டான்?
4. அரச குமாரி எப்பொழுது பேச ஆரம்பித்தாள் ?
5. அரசன் இனியனுக்கு என்ன செய்தான் ?

3. முனியன், சிறுவன் — இவை ஆணைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள்.

பொன்னம்மாள், மகள், சிறுமி—இவை பெண்ணைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள்.

ஆண்		பெண்	ஆண்		பெண்
சிறுவன்	—	சிறுமி	சகோதரன்	—	சகோதரி
கிழவன்	—	கிழவி	பேரன்	—	பேத்தி
அரசன்	—	அரசி	ஒருவன்	—	ஒருத்தி

13. படித்துச் செய்

மௌனமாகப் படி. பிறகு செய்.

1. எழுந்து நில். உடலை வலப்புறம் வளை. நிமிர்ந்து நில். உடலை இடப்புறம் வளை. நிமிர்ந்து நில்.

2. கற்பலகையை எடு. அதில் உன் பெயரை எழுது. கீழே வை.

3. உன் புத்தகத்தை எடு. திறந்து ஐந்தாம் பாடத்தைப் படி. புத்தகத்தை மூடு. கற்பலகையின்மேல் வை.

4. சன்னல் கதவைத் திற. உன் இடத்துக்குப் போ. உட்கார்.

பயிற்சி

1. நில், வளை, எடு, எழுது, வை, படி, மூடு, திற, போ, உட்கார்,—இந்தச் சொற்கள் செயல்களைக் குறிக்கின்றன. இவை **வினைச் சொற்கள்** எனப்படும். செயலைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்**. வினை=செயல்=தொழில்.
2. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச் சொற்களை எடுத்து எழுது:
   (i) முனியன் விறகு வெட்டினான்.
   (ii) அரசகுமாரி சிரித்தாள்.
   (iii) இனியன் தரையைத் தோண்டினான்.
   (iv) இரத்தம் வடிந்தது.
   (v) அவன் வேகமாக நடந்தான்.

14. துப்புரவு

ஆதாரப் பள்ளியில் கண்ணப்பனும் காந்திமதியும் படித்துவருகிறார்கள். அவர்கள் உடலையும் உடையையும் சுத்தமாக வைத்தல், சுற்றுப்புறத் துப்புரவு இவைகளில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஆதலால், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வீட்டையும், வீட்டுப் பொருள்களையும் துப்புரவாக வைக்கும் அலுவல்களை அவர்கள் கவனிப்பது வழக்கம். அவர்களுடைய தாயும் தந்தையுங்கூடச் சுத்தம் செய்யும் வேலையில் அவர்களுக்கு உதவி புரிவார்கள்.



படத்தில் கண்ணப்பன் என்ன செய்கிறான்? கண்ணப்பன் ஒரு நீண்ட துடைப்பத்தினால்

கூரைகளிலும் சுவர்களிலும் உள்ள தூசுகளையும் ஒட்டடைகளையும் துடைத்துக் கீழே தள்ளு கிறான். காந்திமதி துடைப்பத்தினால் வீடு முழுமையும் பெருக்கிக் குப்பைகளை ஒருபுறமாக ஒதுக்குகிறாள். ஒதுக்கிய குப்பைகளைக் கண்ணப்பன் ஒரு கூடையில் அள்ளி எடுத்துக் குப்பைக்குழியில் கொண்டுபோய்க் கொட்டு வான். தாயார் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொடுப்பாள். கண்ணப்பனும் காந்திமதியும் தரையைத் தண்ணீர் விட்டுக் கழுவுவார்கள்.

கமலம் வீட்டிலுள்ள பாத்திரங்களைத் தேய்த்துச் சுத்தம் செய்வாள். குளிப்பதற்கு

முன் கண்ணப்பனும்காந்திமதியும்வீட்டிலுள்ள துணிகளைச் சவர்க்காரம் போட்டுத் தண்ணீரில் ஊறவைப்பார்கள். பிறகு கண்ணப்பன் அவைகளைத் தோய்த்துத் தண்ணீரில் அலசிப் பிழிந்து வைப்பான். காந்திமதி அவைகளை எடுத்து வெயிலில் உலர்த்துவாள். உலர்ந்ததும் தாயார் அவைகளை எடுத்து மடித்துப் பெட்டியில் வைப்பாள்.

இந்த அலுவல்களைச் செய்த பிறகு கண்ணப்பனும் காந்திமதியும் நீராடுவார்கள். உடம்பை நன்ருகத் தேய்த்து அழுக்குப் போகக் குளிப்பார்கள். குளித்தபின் உலர்ந்த துணியினுல் உடம்பைத் துடைத்துக்கொண்டு சுத்தமான ஆடைகளை அணிவார்கள். பின்னர், தாயார் அளிக்கும் காலை உணவைப் புசிப்பார்கள்.

இவ்விதம் வீட்டையும் வீட்டுப் பொருள்களையும் துப்புரவாக வைக்கும் அலுவல்களைக் கண்ணப்பனும், காந்திமதியும் உற்சாகத்துடன் செய்வார்கள்; இழிவு என்று கருதமாட்டார்கள்.

பயிற்சி

1. படம் படித்தல் :

1. முதல் படத்தில் கண்ணப்பன் என்ன செய்கிறுன்? காந்திமதி என்ன செய்கிருள் ?
2. இரண்டாவது படத்தில் கண்ணப்பன் என்ன செய்கிறுன்? காந்திமதி என்ன என்ன செய்கிருள் ?

2. சொல்வளம் :

கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை எழுது :

(i) கூரைகளிலுள்ள தூசுகளையும் —— துடைத்துக் கீழே தள்ளுகிருன்.

(ii) தாயார் —— தண்ணீர் —— கொடுப்பாள்.

(iii) துணிகளைச் —— போட்டுத் தண்ணீரில் ——.

(iv) உடம்பைத் தேய்த்து —— குளிப்பார்கள்.

3. கேள்விகள் :

1. குப்பைகளைக் கண்ணப்பன் என்ன செய்வான் ?
2. கண்ணப்பனும் காந்திமதியும் துணிகளை எவ்விதம் சுத்தம் செய்வார்கள் ?
3. அவர்கள் உடலை எவ்விதம் சுத்தமாக வைத்துக் கொள்ளுவார்கள்?

4. பின்வரும் சொற்களில் எவை பெயர்ச் சொற்கள் ? எவை வினைச் சொற்கள் ? இரண்டு வரிசையில் எடுத்து எழுதுக :

நீராடு, கிணறு, புசி, கண்ணப்பன், பிழி, கூரை, படிக்கிருள், துடைப்பம், வை, தாயார், பள்ளி.

———

15. பழையமுதும் காப்பியும்

காப்பி : பழையமுதே பழையமுதே
பார்த்துவெகு நாளாகுதே
இத்துணைநாள் எந்தஇடம்
இருந்துவந்தாய் பழையமுதே ?

பழையமுது : அன்புடைய அருந்தோழா !
அன்றுமுதல் இன்றுவரை
என்றும்போலே நானிருப்பேன் ;
எனைப்பார்ப்பார் எவருமில்லை.

காப்பி : நன்றுநன்று நானிருக்கும்
நாளினிலே உனைவேண்டார் ;
என்தன்புகழ் அறிந்திருந்தும்
ஏனோவீணாய் ஆசைகொள்வாய் ?

இன்னும்கேளும் என்தாத்தா
இன்புறவே காலையினில்
அன்புடனே என்தனையே
அருந்தாவிடில் தலைவலியே.

பழையமுது : உன்னாலன்றோ கன்றுகளும்
உண்டிடப்பால் இல்லாமல்
ஊரிலுள்ளார் உனக்காகக்
கொண்டமட்டும் கறந்திடுவார்.

அந்தநாளில் பாலைக்கொண்டு
ஆடைத்தயிர் வெண்ணெய்உண்டு
அழகறிவு ஆற்றலுடன்
அவனிதனில் வாழ்ந்தனரே.

உண்பதற்கு அமுதாவேன் ;
ஊட்டமுடன் குளிர்ச்சிதனை
உவந்தளிப்பேன் ; உலகினிலே
உணர்வார்யார் நன்மைதனை ?

காப்பி : எத்துணை நீ நன்மைகளை
ஈந்திடினும் இவ்வுலகில்
என்னைப்போல் உற்சாகம்
அளிக்கவல்லை யாவையோ ?

—வித்துவான், ரா. ஸ்ரீநிவாஸன்

பயிற்சி

அருஞ்சொற்கள் :

அவனி = பூமி. ஆற்றல் = வலிமை. உவந்து = மகிழ்ச்சியோடு.
அழகு + அறிவு = அழகறிவு.

கேள்விகள் :

1. முதலில் காப்பி என்ன கேள்வி கேட்டது ?
2. அதற்குப் பழையமுது என்ன பதில் சொல்லியது ?
3. காப்பி அருந்தாவிடில் என்ன நேரிடுகிறது ?
4. இந்த நாளில் என் கன்றுகளுக்குப் போதுமான பால் விடுவதில்லை ?
5. பழையமுது உண்பதனால் விளையும் நன்மைகள் எவை ?

16. பேசுதல் : படித்தல் : எழுதுதல்

நாம் பிறந்தது முதல் பேசிவருவது தமிழ் மொழி. ஆதலால், தமிழ் நமக்குத் தாய்மொழி. தமிழில் திருத்தமாகப் பேசவும், படிக்கவும், எழுதவும் பழகத்தான் இந்தப் **பூந்தமிழ் வாசக**த்தைப் படிக்கிறீர்கள்.

பேசும்பொழுது நேராக நிமிர்ந்து நின்று, எதிரில் நிற்பவரின் முகத்தைப் பார்த்துப் பேசுவதே முறை. சொல்லவேண்டிய செய்திகளை ஒழுங்குபடுத்திக் கோர்வையாகச் சொல். காதில் விழாதபடி தாழ்ந்த குரலில் பேசுவது சரியன்று. கொச்சையான சொற்களை விலக்க வேண்டும். சொற்களின் உச்சரிப்பு திருத்தமாகவும், தெளிவாகவும் இருப்பது தேவையாகும். ல, ள, ழ; ர, ற; ன, ண இந்த எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்கப் பழகு.



சரியான முறை

தவறான முறை

படிக்கும்பொழுது நேராக நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு படி. உடம்பை வளைத்துக் கொண்டு, அல்லது தலையைச் சாய்த்துக் கொண்டுபடிக்கப் பழகக்கூடாது. புத்தகத்தைக் கண்ணுக்கு ஓரடி தூரத்தில் பிடித்துக்கொண்டு வாசிக்கவேண்டும்.

வாய்விட்டு **உரக்க வாசித்தல்,** வாயைத் திறவாமல் **மனத்திற்குள் வாசித்தல்** எனப் படித்தல் இருவகைப்படும். மனத்திற்குள் வாசித்தல் **மௌன வாசிப்பு** எனப்படும். உரக்க வாசிப்பதில் எழுத்து எழுத்தாகச் சேர்த்து மெதுவாகப் படிப்பது கூடாது; விரைவாக வாசிப்பதும் தகாது. பொருள் விளங்கும்படி நிதானமாகப் படிக்கவேண்டும். படிக்கும் விஷயத்திற்கு ஏற்றவாறு குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் வாசிப்பதே மிகவும் சிறந்தது.

மௌனப் படிப்பை அதிகமாகப் பழக்கிக் கொள். மனம் படிப்பில் ஊன்றி, விஷயங்களைச் சீக்கிரத்தில் அறிய இப்பழக்கம் உதவும். நீ தானாகவே படித்துப் பயிற்சிகளைச் செய்யும்படி இந்தப் புத்தகத்தில் பல பாடங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இவ்விதம் நீ பழக்கிக் கொண்டால் பிறகு செய்தித்தாள்களையும், இதர நூல்களையும் தானாகவே படித்தறியலாம்.

கையெழுத்துப் பயிற்சிகள் இரு வகைப்படும். புத்தகத்திலுள்ள வாக்கியங்களைப் பார்த்து எழுதுவது **பார்த்து எழுதுதல்** ஆகும். பாடத்தைப் பாராமல் ஆசிரியர் சொல்வதைக் கேட்டு எழுதுதல் **சொல்வது எழுதுதல்** ஆகும்.

எழுதும்போது கவிழ்ந்துகொண்டு எழுதாமல் நேராக உட்கார்ந்துகொண்டு எழுது. எழுதுகோலை விரல்களால் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு எழுதப் பழகு. பிறருக்குப் புரியும்படி எழுத்துக்கள் தெளிவாகவும் அழகாகவும் அமையவேண்டும். அத்துடன் விரைவாகவும் எழுதப் பழகிக்கொள். எழுத்துப் பிழைகள் இருக்கக்கூடாது. வரி கோணாமலும், சொற்களுக்கு இடையிலும், வாக்கியங்களுக்கு இடையிலும் இடம் விட்டும் எழுது. எழுத்துக்களின் வடிவங்களை நன்றாகக் கவனித்து எழுத வேண்டும்.

பயிற்சி

1. **சொல்வளம் :**

(i) பூந்தமிழ் = அழகிய தமிழ். வடிவம் = உருவம். மொழி = பாஷை. கவிழ்ந்துகொண்டு = குனிந்து கொண்டு. விரைவாக = வேகமாக. செய்தித்தாள் = சமாசாரப் பத்திரிகை.

(ii) **கோடிட்ட இடங்களை நிரப்பு :**

தமிழ் நமக்குத் —.
சொற்களின் உச்சரிப்பு — — இருக்கவேண்டும்.
படிக்கும்பொழுது உடம்பை — அல்லது — சாய்த்துக்கொண்டு படிக்கக்கூடாது.
வரி — சொற்களுக்கு இடையில்—விட்டும் எழுது.
எழுத்துக்கள் — — அமையவேண்டும்.

2. கேள்விகள் :

1. நாம் ஏன் தமிழ்ப் பாடப் புத்தகத்தைப் படிக்கிரும் ?
2. வாசித்தல் எத்தனை வகைப்படும் ?
3. மௌனப் படிப்பை ஏன் அதிகம் பழகிக்கொள்ள வேண்டும்?
4. கையெழுத்துப் பயிற்சி எத்தனை வகைப்படும் ?
5. எழுதுவதில் கவனிக்கவேண்டியன யாவை ?

3. நிறுத்தல் குறிகள் :

• இது **முற்றுப் புள்ளி.** வாக்கியத்தின் முடிவில் இப் புள்ளியை இடவேண்டும்.

, இது **கால் புள்ளி.** இக்குறியுள்ள இடத்தில் சிறிது நேரம் மட்டுமே நிறுத்தி வாசிக்கவேண்டும்.

? இது **கேள்விக் குறி.** கேள்வி வாக்கியங்களின் முடிவில் முற்றுப் புள்ளிக்குப் பதிலாகக் கேள்விக் குறி இடவேண்டும்.

நிறுத்தவேண்டிய இடங்களைக் குறிப்பிடும்பொருட்டு வாக்கியங்களில் இக்குறிகளை இடுகிறோம். இவை **நிறுத்தல் குறிகள்** எனப்படும்.

இந்தப் பாடத்தில் இக்குறிகள் இடப்பட்டுள்ள இடங்களைப் பார்த்தறி. பாடங்களைப் பார்த்து எழுதுவதில் நிறுத்தல் குறிகளை அமைத்து எழுதவேண்டும்.

0 N52
130239
சென்னை-600 008.

17. கம்பர்

'கல்வியில் பெரியவர் கம்பர்' என்பது ஒரு முதுமொழி. கல்வியிற் பெரியவ ராகிய கம்பர் ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர். சோழ நாட்டில் திருவழுந்தூர் என்னும் ஊரில் பிறந் தவர். இவர் எழுதியுள்ள நூல்களில் இராமா யணம் புகழ்பெற்றது. அக்கால மன்னர்களும், பிறரும் அவரைப் பெரிதும் போற்றி ஆதரித்து வந்தனர். இவரது கவியின் அருமை பெருமை களை அறிந்த மக்கள் இவரைக் **கவிச் சக்கரவர்த்தி கம்பர்** என்று இப்பொழுதும் கூறுவது உண்டு.

இவ்வாறு கல்வியிற் சிறந்த கம்பர், ஒரு நாள் மாலை நேரத்தில் உலாவப்போனார். அப்பொழுது தோட்டத்தில் ஏற்றம் இறைப்பவர் பாடிக் கொண்டிருந்தனர். சூரியன் மறையும் நேரம். கம்பர் அவர்களுடைய பாட்டை உற்றுக் கேட்டார். ஏற்றம் இறைப்பவர்கள், "மூங்கில் இலை மேலே தூங்கும் பனிநீரே" எனப் பாடினர். அதற்குள் பொழுதுபோய்விட்டமை யால் அவர்கள் பாட்டை அத்துடன் நிறுத்தி விட்டு, வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள்.

கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் அப்பாட்டை முடிக்கக் கருதினர். அடுத்த அடி என்னவாக இருக்கும் என்று நெடுநேரம் யோசித்துப் பார்த்தார். அப்பொழுது அவருக்கு ஒரு முடிவும் தோன்றவில்லை.

ஆகையால், இரவு முழுவதும் அங்கேயே தங்கி, மறுநாள் காலையில் ஏற்றம் இறைப்பவர் வரும் வரையில் காத்திருந்தார். அவர்கள் காலையில் வந்து வேலை ஆரம்பிக்கும்போது பாட்டையும் தொடர்ந்து பாடினர்கள்.

"மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே;
தூங்கும் பனிநீரை வாங்கு கதிரோனே."

இதைக் கேட்டதும் கம்பர் பெரிதும் வியப்படைந்தார். பாட்டின் நயமும், கருத்தின் அழகும் அவரது மனத்தைக் கொள்ளைகொண்டன. அவர் "ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப் பாட்டு இல்லை" என்று சொல்லிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினர்.

பயிற்சி

1. சொல்வளம் :

முதுமொழி = பழமொழி. ஏறக்குறைய = சுமார். ஆண்டு = வருடம். போற்றி = காப்பாற்றி. கவி = செய்யுள், பாட்டு. பனிநீர் = பனித்துளி. கதிரோன் = சூரியன். வியப்பு = ஆச்சரியம்.

2. கேள்விகள் :

1. கம்பரைப்பற்றி வழங்கும் பழமொழி யாது ?
2. அவர் எந்த ஊரில் பிறந்தவர் ?
3. அவர் எழுதிய முக்கியமான நூல் எது ?
4. ஏற்றம் இறைப்பவர் பாடிய முதலடி யாது ?
5. கம்பர் ஏற்றப் பாட்டின் இரண்டாவது அடியை எவ்விதம் அறிந்தார் ?
6. அவர் என்ன சொல்லிக்கொண்டு வீடு திரும்பினர்?

3. வலப்புற ஓரத்தில் காணும் சொற்களைப் பொருத்தமான இடங்களில் அமைத்து எழுது :

மாதிரி: — தண்ணீர் இறைக்கலாம்.
ஏற்றத்தால் தண்ணீர் இறைக்கலாம். | ஏற்றத்தால்

1.	— பென்சில் சீவலாம்.	கத்தரிக்கோலால்
2.	— தரையை வெட்டலாம்.	ஊசியால்
3.	— நோட்டுத் தைக்கலாம்.	கோடரியால்
4.	— விறகு பிளக்கலாம்.	மண்வெட்டியால்
5.	— மரம் அறுக்கலாம்.	கத்தியால்
6.	— துணி கத்தரிக்கலாம்.	இரம்பத்தால்

4. பின்வரும் சொற்களின் முதல் எழுத்துக்கள் அகர வரிசையில் (அதாவது அ, ஆ, இ, ஈ,......ஔ என்ற வரிசையில்) வருமாறு எடுத்து எழுது :

உரல், ஆடு, ஈரம், ஏணி, அணில், ஊசி, இலை, எறும்பு, ஓடு, ஐந்து, ஔவை, ஒன்று.

18. காய்கறித் தோட்டம்

ஆசிரியர்: பிள்ளைகளே! இப்பொழுது கடைசிப் பாடவேளை. வீட்டுக்குப் போவதற்கு முன் தெருக்கோடியிலுள்ள காய்கறித் தோட்டத்துக்குச் செல்லுவோம். அங்குள்ள செடி கொடிகளைப் பார்த்துவருவோம்.

பிள்ளைகள் (மகிழ்ச்சியுடன்): அது உல்லாசமாக இருக்கும், ஐயா!

ஆசிரியர்: இரண்டு வரிசையில் ஒருவர்பின் ஒருவராக நில்லுங்கள். வீதியின் ஓரத்தில் ஒழுங்காக நடந்து வாருங்கள்.

(எல்லோரும் தோட்டத்தை நோக்கிச் செல்லுகிறார்கள்.)

கண்ணகி: இதோ தோட்டத்துக்கு வந்து விட்டோம். உள்ளே நுழையலாமா, ஐயா?

ஆசிரியர் (தோட்டக்காரரைப் பார்த்து): இவர்கள் உள்ளே வர அநுமதி கொடுங்கள். நீங்கள் பயிர்செய்யும் காய்கறிச் செடிகளை இவர்களுக்குக் காட்டுங்கள்.

தோட்டக்காரர்: சரி ஐயா. நானும் கூட வருகிறேன்.

ஆசிரியர் (பிள்ளைகளைப் பார்த்து): உள்ளே போகலாம். பாத்திகளை மிதிக்காமலும், செடிகளைச் சேதப்படுத்தாமலும் எச்சரிக்கையாக இருங்கள்.

கத்தரிச் செடி

முருகன்: இந்தக் கத்தரிச் செடிகளில் காய்கள் செழுமையாக இருக்கின்றனவே!

ஆசிரியர்: கத்தரிக் காயை உன் வீட்டில் என்ன செய்கிறார்கள், மணி?

மணி: கறி சமைக்கிறார்கள்; குழம்பு செய்கிறார்கள்; துவையல் அரைக்கிறார்கள்.

பிள்ளைகள்: தோட்டக்காரரே! கத்தரிச் செடிகளை எப்படிப் பயிர்செய்தீர்?

தோட்டக்காரர்: பண்படுத்திய பாத்திகளில் கத்தரி விதைகளைத் தெளித்துத் தண்ணீர் விட்டுவந்தேன். அவை முளைத்து இரண்டு வாரத்தில் நாற்றுக்களாக வளர்ந்தன. அவை

களைப் பிடுங்கி வேறு பாத்திகளில் இரண்டடி தூரத்துக்கு ஒன்ருக வரிசையாக நட்டேன். இரண்டு மாதங்களில் பூத்துக் காய்க்க ஆரம்பித்தன.

கதிரேசன்: பூக்கள் ஊதா நிறமாக இருக்கின்றன; காய்கள் தனித்தனியாகத் தொங்குகின்றன.

மாணிக்கம்: இதோ மஞ்சளாகப் பூத்திருக்கிறதே, இது என்ன செடி?

ஆசிரியர்: வெண்டைச் செடி. இதில் பூக்களும், பிஞ்சுகளும், காய்களும் இருப்பதைக் கவனியுங்கள்.


வெண்டைச் செடி

தோட்டக்காரர்: இந்த வெண்டை நெற்றைப் பாருங்கள். இது வெடித்து, விதைகள் சிதறி விழும். வெண்டைச் செடியில் குட்டை வெண்டை, ஆகாய வெண்டை என இருவகை உண்டு.

பார்வதி: இந்தப் பாத்தியிலுள்ள கொத்தவரைச் செடிகளைப் பார்ப்போம். காய்கள் கொத்துக் கொத்தாகக் காய்த்திருக்கின்றனவே!

கோமதி : எங்கள் வீட்டில் கொத்தவரைக் காயைக் கறி செய்கிறார்கள்; கூட்டும் செய்வதுண்டு. இந்தச் செடிகளை எப்படிப் பயிர்செய்யலாம்?

கொத்தவரைச் செடி

தோட்டக்காரர் : கொத்தவரை விதைகளைத் தனித் தனியாக நட்டுத் தண்ணீர் விட்டு வந்தால் செடிகள் வளர்ந்து அறுபது நாட்களில் பலன் கொடுக்கும்.

கோபாலன் (ஆசிரியரைப் பார்த்து): அதோ கொடிகள் பந்தலில் படர்ந்து, நீண்ட காய்கள் தொங்குகின்றனவே, அவை புடலங்காய்கள் அல்லவா?

ஆசிரியர்: ஆம். புடலங் கொடியில் மெல்லிய பற்றுக் கம்பிகளும், அகன்ற இலைகளும், வெண்மையான பூக்களும் இருப்பதைக் கவனியுங்கள்.

புடலங் கொடி

ஜான் : அந்தப் பந்தலில் உள்ள அவரைக் கொடிகளைப் பார்ப்போம். அவரைக் கொடிகள் கொழு கொம்புகளைச் சுற்றிப் பிடித்துக் கொண்டு படர்ந்துள்ளன.

சுவாமிநாதன் : அவரை இலைகள் மூன்று மூன்றாகச் சேர்ந்திருக்கின்றன. பூக்களில் சில வெண்மை நிறமாகவும், சில ஊதா நிறமாகவும் இருக்கின்றன.

தோட்டக்காரர் : ஆடி மாதத்தில் குழிகள் வெட்டி எரு இட்டு, விதைகளை நடுவோம். அவை கொடிகளாக வளர்ந்துவரும்பொழுது கால்கள் நட்டுப் பந்தல் அமைப்போம். கார்த்திகை, மார்கழி மாதங்களில் அவரைக் கொடிகள் பூப் பூத்துக் காய்கள் தரும்.

ஆசிரியர் (தோட்டக்காரரைப் பார்த்து) : உங்கள் தோட்டத்தில் வேறு என்ன பயிர் செய்வதுண்டு ?

தோட்டக்காரர் : மிளகாய், பாகல், பூசணி, பறங்கி, கீரை வகைகள் இவைகளையும் சில மாதங்களில் பயிர்செய்வோம். வேலி ஓரங்களி லுள்ள முருங்கை மரங்களில் முருங்கைக் காய்கள் காய்க்கும்.

ஆசிரியர் : உங்கள் தோட்டத்தில் விளையும் காய் கறிகளை என்ன செய்கிறீர் ?

தோட்டக்காரர் : அவைகளைப் பறித்து, காய் கறிச் சந்தைக்குக் கொண்டுபோய் விற்று விடுவோம்.

ஆசிரியர்: பிள்ளைகளே! உடல் வளர்ச்சிக்கு வேண்டிய உணவுச் சத்துக்கள் கீரை வகை களிலும், காய்கறிகளிலும் அதிகமாக இருக்கின் றன. ஆதலால், காய்கறிகளை உண்பதால் உடல் நலம் பெறலாம். நீங்களும் உங்கள் வீட்டுக் கொல்லைப்புறங்களில் காய்கறிச் செடிகளைப் பயிர்செய்யுங்கள். (தோட்டக்காரரைப் பார்த்து) நாங்கள் போய்வருகிறோம்.

[இருட்டுவதற்குமுன் எல்லோரும் வீடு திரும்பினார்கள்.]

பயிற்சி

1. சொல்வளம்:

இந்தப் பாடத்தில் வந்துள்ள காய்கறிகளின் பெயர்களை எடுத்து எழுதுக.

2. தெரிந்துகொள்:

பூக்கள் **கொத்துக் கொத்தாய்** மலர்கின்றன.
செடிகள் **வரிசை வரிசையாய்** வளர்கின்றன.
ஆடுகள் **மந்தை மந்தையாய்** மேய்கின்றன.
எறும்புகள் **சாரை சாரையாய்ப்** போகின்றன.
மனிதர்கள் **கூட்டங் கூட்டமாய்** நிற்கிறார்கள்.
தேங்காய்கள் **குலை குலையாய்க்** காய்க்கின்றன.
நெல் **குவியல் குவியலாய்** இருக்கிறது.
வாழைப்பழம் **சீப்புச் சீப்பாய்ப்** பழுக்கிறது.
புத்தகங்கள் **அடுக்கு அடுக்காய்** இருக்கின்றன.

3. கேள்விகள் :

1. ஆசிரியர் தோட்டத்தில் நுழைவதற்குமுன் என்ன எச்சரிக்கை செய்தார் ?
2. கத்தரிக்காயை எவ்விதங்களில் உபயோகிக்கிறோம்?
3. கத்தரிச் செடிகளை எவ்விதம் பயிர்செய்யலாம் ?
4. வெண்டைச் செடியில் இருவகை எவை ?
5. கொத்தவரைச் செடிகளை எவ்விதம் பயிர்செய்கிறார்கள் ?
6. புடலங் கொடிகள் எவ்வாறு படருகின்றன ? புடலங்காய்களின் நுனியில் ஏன் கற்களைக் கட்டுகிறார்கள் ?
7. அவரை விதைகளை எந்த மாதத்தில் நடவேண்டும்? எந்த மாதங்களில் காய்கள் உண்டாகும்?
8. காய்கறிகளை நாம் ஏன் அதிகம் உண்ணவேண்டும்?

ஒருமை	:	**பன்மை**
ஒரு செடி	—	இரண்டு செடிகள்
ஒரு காய்	—	ஐந்து காய்கள்

ஒரு பொருளைக் குறிக்கும் பெயர் **ஒருமை எண்.** ஒன்றுக்கு அதிகமான பொருள்களைக் குறிக்கும் பெயர் **பன்மை எண்.**

4.

ஒருமை		**பன்மை**
நான்	—	நாங்கள்
நீ	—	நீங்கள்
அவன், அவள்	—	அவர்கள்
அது	—	அவை, அவைகள்

5. செயல் முறை :

உன் வீட்டுக் கொல்லைப்புறத்தில் பாத்திகள் அமைத்துக் கீரை, வெண்டை, கொத்தவரை இவைகளைப் பயிர்செய். அவைகளின் வளர்ச்சியைப்பற்றித் தோட்டக் குறிப்பும் எழுதி வா.

19. பாரி வள்ளல்

பழங்காலத்தில் தமிழ்நாட்டில் **பறம்பு நாடு** என்று ஒரு சிறு நாடு இருந்தது. அது முந்நூறு ஊர்களை உடையது. பறம்பு நாடு மலை நாடு. அங்கு மலைகளும் குன்றுகளும் காடுகளும் மிகுதியாக இருந்தன.

ஒரு காலத்தில் பறம்பு நாட்டைப் **பாரி** என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவன் இரக்கமுள்ள மனம் உள்ளவன். தனது செல்வங்களை ஏழைகளுக்கும் புலவர்களுக்கும் தாராளமாக வழங்கிவந்தான். தன்னிடம் யார் வந்து எதைக் கேட்டாலும் இல்லையென்னாது அளித்துவந்ததால், அவனை எல்லோரும் **பாரி வள்ளல்** என்று சிறப்பாய்ச் சொல்லுவார்கள்.

ஒரு நாள் பாரி வள்ளல் தன் தேரில் ஏறிக்கொண்டு மலைவளம் காணச் சென்றான். மலைச் சரிவுகளில் மரஞ் செடி கொடிகள் தழைத்து வளர்ந்திருந்தன. அவற்றில் மலர்களும் கனிகளும் நிறைந்து விளங்கின. ஒருபுறம் மான்கள் அங்குமிங்கும் ஓடி விளையாடின. ஒரு புறம் மயில்கள் மகிழ்ச்சியுடன் தோகைகளை விரித்து ஆடின.

இவ்வாறு தன் நாட்டின் இயற்கை அழகைக் கண்டு களித்துச் செல்லும்போது எதிரில் ஒரு

முல்லைக் கொடியைக் கண்டான். பல இலை களோடும் அரும்புகளோடும் மலர்களோடும் அது செழுமையாய் வளர்ந்திருந்தது. ஆனால்

அது பற்றிக்கொண்டு படர்வதற்கு மரமோ செடியோ அருகில் இல்லை. அந்த முல்லைக்கொடி காற்றில் அசைந்து தத்தளித்துக்கொண்டிருந்ததைப் பாரி வள்ளல் கண்டான். அது படும் துன்பத்தைக் கண்டு அவன் மனம் இளகியது. பாரி, “இந்த முல்லைக்கொடி பற்றிப் படருவதற்குக் கொழுகொம்பு இல்லை. தான் படும் துன்பத்தை எடுத்துக் கூறவும் அதற்கு இயலவில்லை.” என்று எண்ணி வருந்தினான்.

உடனே தன் தேரை ஓட்டிக்கொண்டு போய் முல்லைக்கொடியின் அருகில் நிறுத்தினான்; கீழே இறங்கிக் குதிரைகளை அவிழ்த்துவிட்டான்; கொடியைத் தேரின்மேல் படரவிட்டான்; பிறகு அவன் கால்நடையாக மகிழ்ச்சியோடு அரண்மனைக்குத் திரும்பினான்.

பாரி வள்ளலைப்போல நாமும் எல்லா உயிர்களிடத்தும் அன்பாக இருக்கவேண்டும்.

பயிற்சி

1. சொல்வளம் :

பறம்பு = ஒரு மலை. புலவர் = கவி பாடுபவர்கள். வள்ளல் = யாசிப்பவர்க்கு இல்லை என்னாமல் வேண்டியதைக் கொடுப்பவன். வளம் = செழுமை. கனி = பழம். மலர் = பூ. தோகை = சிறகு. கொழு கொம்பு = கொடிகள் பற்றிப் படருவதற்கு ஊன்றப்படும் கோல்.

2. கேள்விகள் :

1. பறம்பு நாட்டை ஒரு காலத்தில் ஆண்டுவந்த அரசன் யார் ?
2. பாரியை ஏன் வள்ளல் என்று சிறப்பித்துச் சொல்லுகிருர்கள்?
3. மலைவளம் காணச் சென்ற பாரி என்ன என்ன கண்டான் ?
4. முல்லைக்கொடி ஏன் தத்தளித்துக்கொண்டிருந்தது ?
5. பாரி முல்லைக்கொடிக்கு என்ன செய்தான் ?

3. i. இவைகளுக்குப் பன்மைச் சொற்கள் எழுது :

மலை, காடு, மரம், கனி, மலர்.

ii. இவைகளுக்கு ஒருமைச் சொற்கள் எழுது :

நீங்கள், நாங்கள், நாட்கள்,
கற்கள், அரும்புகள், உயிர்கள்.

4. தெரிந்துகொள் :

(உதாரணம்) 1. மயில் ஆடு**கிறது**.
மயில்கள் ஆடு**கின்றன**.

2. அவன் திரும்பி**னுன்**.
அவர்கள் திரும்பி**னுர்கள்**.

3. மாடு மேய்**கிறது**.
மாடுகள் மேய்**கின்றன**.

வினைச்சொற்களிலும் ஒருமை, பன்மை உண்டு.

———

20. தினத்தாள் செய்தி

இப்பொழுது பல வீடுகளுக்கும் நாள் தோறும் செய்தித் தாள்கள் வருகின்றன. செய்தித் தாள்களைப் பத்திரிகைகள் என்றும் சொல்லுவார்கள். பெரியவர்கள் அன்றாடச் செய்திகளை அறியப் பத்திரிகை படிப்பதைக் கவனித்திருப்பீர்கள். நீங்களும் பத்திரிகைச் செய்தி படிக்கப் பழகினால் உங்களுடைய அறிவு வளர்ச்சி பெறும்.

கீழே காணும் தினத்தாள் செய்திகளை மௌனமாகப் படியுங்கள்.

செடி நடும் விழா

வளவனூர், ஆகஸ்டு 15உ

பஞ்சாயத்துச் சபையின் ஆதரவில் ஆகஸ்டு 6உ முதல் 12உ வரை **செடி நடும் வாரம்** கொண்டாடப்பட்டது. முதல் நாள் மாலையில் ஜில்லா விவசாய அதிகாரி விழாவைத் திறந்துவைத்தார். அப்பொழுது சுற்றுப் புறத்திலுள்ள பல கிராமங்களிலிருந்தும் மக்கள் திரளாக வந்திருந்தனர். இந்த வாரத்தில் சாலை ஓரங்களில் நிழல் தரக்கூடிய ஆல், அரசு, புளி, வேம்பு முதலியவற்றின் சிறு செடிகள் பஞ்சாயத்துச் சபையாரால் நடப்பட்டன. சொந்தத் தோட்டங்களிலும் தோப்புக்களிலும் மா, பலா, கொய்யா முதலிய கனி தரும் மரங்களின் கன்றுகளைப் பலர் நட்டனர். ஆடுகள் மேயாமலிருக்க அவைகளைச் சுற்றி வேலிகள் கட்டப்பட்டன. செடிகள் வாடாமல் தண்ணீர் விட்டுவர ஏற்பாடும் செய்யப்பட்டது.

[நமது நிருபர்]

பருவ கால மழை ஆரம்பம்

திருக்குற்ருலம், ஜூலை 22உ

இங்குப் பருவ கால மழை ஆரம்பித்துவிட்டது. சென்ற நான்கு நாட்களாகத் தூற்றலும் மழையுமாய் இருக்கின்றன. அருவியில் தண்ணீர் பெருகியுள்ளது. அதில் நீராடும்பொருட்டுத் திரளான மக்கள் பல ஊர்களிலிருந்தும் வந்திருக்கிருர்கள். காலநிலை குளிர்ந்து சுகமாயிருக்கிறது.

பயிற்சி

1. சொல்வளம் :

நிருபர் பத்திரிகைகளுக்குச் செய்தி எழுதி அனுப்புகிறவர். அருவி = மலையிலிருந்து விழும் ஆறு. விழா = உற்சவம். அன்ருடம் = தினசரி.

2. கோடிட்ட இடங்களை நிரப்பு :

1. நான்கு நாட்களாக —— —— இருக்கின்றன.
2. நிழல் தரக்கூடிய மரங்கள் ——, ——, ——, ——.
3. ——, ——, —— இவை பழம் தரும் மரங்கள்.

3. கேள்விகள் :

1. உங்கள் பள்ளிக்கூடத்தில் என்ன பத்திரிகைகள் வருவிக்கிருர்கள் ?
2. உனது ஊரில் பருவ கால மழை எந்த மாதத்தில் ஆரம்பிக்கிறது ?
3. செடி நடும் வாரம் உன் ஊரில் கொண்டாடப் படுவது உண்டா ?

4. செய்தி சொல்லல் :

முதல் செய்தியை உன் மாமனிடம் சொல்.

21. பதினெட்டாம் பெருக்கு

தமிழ் மக்களாகிய நாம் நமது வீடுகளில் ஒவ்வொரு வருடமும் பல பண்டிகைகள் கொண்டாடுகிறோம். இப்பண்டிகைகளில் வருடப் பிறப்பு, பதினெட்டாம் பெருக்கு, நவராத்திரிப் பண்டிகை, தீபாவளிப் பண்டிகை, கார்த்திகைப் பண்டிகை, பொங்கல் பண்டிகை இவை முக்கியமானவை ஆகும். இவைகள் எந்த எந்த மாதங்களில் வரும் தெரியுமா? பண்டிகை நாட்களில் பள்ளிக்கூடம் இல்லை. அந்த நாட்கள் விடுமுறை நாட்களாகும்.

படத்தை நோக்குங்கள். அதில் என்ன பண்டிகை கொண்டாடுவதைக் காண்கிறீர்கள்? பதினெட்டாம் பெருக்கு அல்லவா? ஆண்டு தோறும் ஆடி மாதம் பதினெட்டாம் நாள் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இந்த மாதத்தில் தமிழ் நாட்டிலுள்ள ஆறு களில் வெள்ளப் பெருக்கு அதிகம் வரும். ஏரி குளங்களிலும், வயல்களிலும் ஆற்று வெள்ளம் பாய்ந்து, எங்குப் பார்த்தாலும் நீர் நிரம்பி யிருக்கும். நன்செய் புன்செய்களில் பயிர்வேலை ஆரம்பித்து நடைபெறும். தோட்டங்களில் பயிர்க் குழிகள் தோண்டி, விதைகள் நடுவார்கள். 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்னும் பழமொழி உங்களுக்குத் தெரியு மல்லவா?

புதுநீர்ப் பெருக்கின் பல நன்மைகளையும் உணர்ந்த தமிழ் மக்கள் ஆடி மாதத்துப் பதினெட்டாம் நாளை ஒரு பண்டிகையாகப் பெருமகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறார்கள்.

ஆண்களும் பெண்களும் நல்லாடை அணிந்து, திரள்திரளாக ஆற்றங்கரைகளுக்குச்

செல்வார்கள்; ஆற்று வெள்ளத்தில் மலர்கள் தூவி, தின்பண்டங்கள் படைத்து, அதனை வழிபடுவார்கள்; இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பார்கள்.

சிறுவர்களுக்குப் பதினெட்டாம் பெருக்கு என்றால் பெருங் கொண்டாட்டம். பெற்றோர் வாங்கித் தரும் விளையாட்டுத் தேர்களில் படங்களை வைத்து அழகுபடுத்தி, அவைகளைக் கயிற்றினால் இழுத்துக்கொண்டு நீர்த் துறைகளுக்குச் செல்வார்கள். நீரில் குதித்து மூழ்குவார்கள்; நீந்தி விளையாடுவார்கள்; பிறகு கரையேறி, அழகிய ஆடை அணிவார்கள். தாங்கள் கொண்டு வந்துள்ள கட்டுச் சாதம், சிற்றுண்டி இவைகளைச் சிறியோரும் பெரியோரும் உண்டு மகிழ்வார்கள். பிறகு சிறு தேர்களை இழுத்துக் கொண்டு வீடு திரும்புவார்கள்.

பதினெட்டாம் பெருக்கு தமிழ் நாட்டுக்கே சிறப்பான ஒரு பண்டிகை என்று கூறலாம். மிகப் பழைய காலத்தில் கூட இவ்விழா கொண்டாடப்பட்டுவந்தது என்று பண்டைத் தமிழ் நூல்களிலிருந்து அறிகிறோம். இதைப் **புதுப்புனல் விழா** என்றும் கூறுவர்.

பயிற்சி

1. சொல்வளம் :

வருடம் = வருஷம். ஆண்டு தோறும் = ஒவ்வொரு வருடமும். நன்செய் = சேற்றில் பயிர் செய்யும் நிலம். புன்செய் = புழுதியில் பயிர்செய்யும் நிலம். வழிபடுவார்கள் = பூசை செய்வார்கள். புனல் = தண்ணீர். ஆறு+வெள்ளம் = ஆற்றுவெள்ளம். ஆறு+கரை = ஆற்றங்கரை.

2. கேள்விகள் :

1. தமிழ் மக்கள் கொண்டாடும் பண்டிகைகளில் ஐந்து கூறுக.
2. அவை முறையே எந்த எந்த மாதங்களில் வரும்?
3. ஆடி மாதத்தில் ஆறுகளும், குளங்களும் எவ்வாறு இருக்கும்?
4. ஆடி மாதத்தைப்பற்றிய பழமொழி யாது?
5. பதினெட்டாம் பெருக்குப் பண்டிகையன்று ஆண்களும் பெண்களும் என்ன செய்வார்கள்? சிறுவர்கள் என்ன செய்வார்கள்?
6. இந்தப் பண்டிகைக்குப் பண்டைக் காலத்தில் என்ன பெயர்?

3. வலப்புற ஓரத்தில் கொடுத்துள்ள பெயர்ச் சொற்களைக் கோடிட்ட இடங்களில் பொருந்தும்படி எழுது :

1. — விதைகளை நடுவார்கள்.	நாம்
2. — பண்டிகைகள் கொண்டாடுகிறோம்.	குடியானவர்கள்
3. — நிரம்பி இருக்கும்.	பயிர்வேலை
4. — நடைபெறும்.	தண்ணீர்
5. — நீந்தி விளையாடுகிறார்கள்.	நீங்கள்
6. — பட்டத்தை நோக்குங்கள்.	சிறுவர்கள்

22. தம்மை மறந்த மூடர்கள்



பத்து மனிதர்கள் சேர்ந்து ஒரு நாள் மீன் பிடிக்கச் சென்றார்கள். அவர்கள் கல்வி அறிவு இல்லாதவர்கள்; கபடு, சூது அறியாத எளியவர்கள். நடு ஆற்றில் இறங்கிப் பல இடங்களிலும் சென்று மீன் பிடித்தார்கள். அன்று நதியில் வெள்ளம் அதிகம். மீன் பிடித்தபிறகு எல்லோரும் கரையேறிவந்தார்கள். பிடித்த மீன்களை அருகிலிருந்த ஒரு வியாபாரியிடம் அவர்கள் விற்றார்கள். பிறகு விலைப் பணத்தை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினார்கள்.

வரும் வழியில் அவர்களில் ஒருவன், "இன்று ஆற்றில் வெள்ளமும், வேகமும் அதிகம். எல்லோரும் கரையேறிவிட்டோமா? எண்ணிப் பார்ப்போம்" என்றான். ஒவ்வொருவனும் தன்னை விட்டுவிட்டுப் பிறரை மட்டும் எண்ணினான். ஒன்பது பேர்களே இருப்பதாக அவர்கள் அறிந்தார்கள். உண்மையில் ஒருவனை ஆறு அடித்துக்கொண்டு போய்விட்டதாகவே அவர்கள் கருதினார்கள். அதனால் துக்கத்துடன் அழத்தொடங்கினார்கள்.

அவ்வழியாக வழிப்போக்கன் ஒருவன் வந்துகொண்டிருந்தான். அவன் அவர்கள் அழுவதைக் கண்டு, காரணத்தை விசாரித்தான். "நாங்கள் பத்துப் பேர்கள் நடு ஆற்றில் மீன் பிடிக்கச் சென்றோம். கரையேறி வந்து எண்ணினதும் ஒன்பது பேர்களே இருக்கிறோம்; ஒருவன் தண்ணீரில் மூழ்கிப் போய் விட்டான்" என்று சொல்லி, ஒரு மனிதன் தன்னை எண்ணாமல் மற்றவரை மட்டும் எண்ணிக் காட்டினான். வழிப்போக்கன் இவர்களது அறிவீனத்தை உணர்ந்தான். அவன், "நான் அந்தப் பத்தாவது மனிதனை வர

வழைத்துத் தருகிறேன். எனக்கு என்ன தருவீர்கள்?" என்று கேட்டான். அவர்கள், "நாங்கள் இன்று மீன் பிடித்து விற்ற பணத்தை மடியில் வைத்திருக்கிறோம். அத்தனையையும் கொடுக்கச் சம்மதிக்கிறோம். எப்படியாவது எங்கள் தோழன் அகப்பட்டால் போதும்" என்று சொன்னார்கள்.

வழிப்போக்கன் பணம் முழுவதையும் வாங்கிக்கொண்டு, அவர்களை வரிசையாக நிறுத்தினான். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து என்று ஒவ்வொருவரையும் சுட்டிக்காட்டி, ஆகப் பத்து மனிதர்கள் இருப்பதை எண்ணிக் காட்டினான். அவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள்.

கடவுள்தான் இவ்வழிப்போக்கன் மூலமாக ஆற்றில் போன தோழனை வருவித்துக் கொடுத்தாரென்று அவர்கள் நம்பினார்கள். பிறகு, கடவுளையும் வழிப்போக்கனையும் வாழ்த்தி வீடு சென்றார்கள்.

பயிற்சி

1. (i) **சொல்வளம்:**

சூது = வஞ்சகம். அறிவீனம் = மூடத்தன்மை.
சுட்டி = விரலால் குறிப்பிட்டு.

(ii) **தெரிந்துகொள் :**

அறி	— அறிந்துகொள்	அரி	— அரிவாளால் நறுக்கு
இறங்கு	— கீழே இறங்கு	இரங்கு	— இரக்கப்படு
கறை	— வர்ணக் கறை	கரை	— ஆற்றின் கரை
ஏறி	— மேலே ஏறி	ஏரி	— நீர்நிலை

2. கேள்விகள் :

1. பத்துப் பேரும் எங்கே மீன் பிடிக்கப்போனார்கள் ?
2. திரும்பிவரும் வழியில் அவர்களில் ஒருவன் என்ன சொன்னான் ?
3. எண்ணுவதில் அவர்கள் செய்த தவறு யாது ?
4. வழிப்போக்கனிடம் அவர்களில் ஒருவன் என்ன சொன்னான் ?
5. காணமற்போனவனை வழிப்போக்கன் எப்படி வரவழைத்துக் கொடுத்தான் ?

3. வலப்புறத்தில் கொடுத்துள்ள வினைச் சொற்களைக் கோடிட்ட இடங்களில் பொருந்தும்படி எழுது :

ஒருவன்	——————.	மேய்ந்தன
பலர்	——————.	திரும்பினாள்
அவள் வீடு	——————.	சென்றோம்
அவர்கள் வீடு	——————.	மேய்ந்தது
நாங்கள்	——————.	திரும்பினார்கள்
நான்	——————.	சென்றேன்
மாடு	——————.	தேடினான்
மாடுகள்	——————.	தேடினார்கள்

23. கடிதங்கள்

1. நண்பனுக்கு எழுதும் கடிதம்

144, மேலை மாட வீதி,
மயிலாப்பூர், சென்னை-4
2–11–1952

அன்பார்ந்த நண்பா,

இங்கு யாவரும் நலம். அவ்விடத்து நலம் அறிய ஆவல்.

வருகிற ஞாயிற்றுக்கிழமை என் தம்பி திருநிறை செல்வன் நக்கீரனுக்குப் பிறந்த நாள் கொண்டாட எண்ணியுள்ளோம். அன்று காலை நடைபெறும் காதணிச் சடங்குக்கும், பகல் 11 மணிக்கு நடக்கும் விருந்துக்கும் நீ வந்துசேரவும். வரும்பொழுது உன் தங்கை திலகவதியையும் அழைத்து வா.

உன் அன்பார்ந்த நண்பன்
புகழேந்தி.

முகவரி :

திரு. ப. நடராசன்,
67, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை–5.

பயிற்சி

1. இந்தக் கடிதம் எழுதியவர் யார் ?
2. யாருக்கு எழுதியது ?
3. எதற்காக எழுதியது ?
4. எந்த ஊரிலிருந்து எழுதியது ?

2. ஆசிரியருக்கு எழுதும் கடிதம்

79, வடக்கு வீதி,
திருவானைக்கா,
2–9–1952

அன்புள்ள அம்மணி,

வணக்கம்.

காய்ச்சல், தலைவலி காரணமாக நேற்று இரவுமுதல் படுத்த படுக்கையில் இருக்கிறேன். வைத்தியர் வந்து பார்த்து, மருந்து கொடுத்துவருகிறார். இரண்டு நாட்களில் உடல் நலம் பெற்றுப் பள்ளிக்கூடத்திற்குப் போகலாம் என்கிறார். ஆதலால் இன்றைக்கும், நாளைக்கும் ஆக இரண்டு நாட்களுக்கு விடுமுறை கொடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

வந்தனம்.

தங்கள் பணிவுள்ள மாணவி,
தி. கு. புனிதவதி
(மூன்றும் வகுப்பு)

தி. சி. குமரகுருபரன்
(தகப்பனார் கையொப்பம்)

முகவரி :

ஆசிரியர் அவர்கள், மூன்றும் வகுப்பு, நகராட்சித் தொடக்கப் பள்ளி, **திருவானைக்கா.**

பயிற்சி

1. கடிதம் எழுதுவதில், (அ) எழுதுபவனின் முகவரி, (ஆ) தேதி, (இ) தொடக்கம், (ஈ) உள்ளுறை, (உ) முடிவு, (ஊ) கையெழுத்து, (எ) போய்ச் சேர வேண்டிய முகவரி, — இவைகளை எங்கெங்கே எழுதவேண்டுமென்று தெரிந்துகொள்.

2. முந்திய கடிதத்தின் முறைக்கும் இந்தக் கடிதத்தின் முறைக்கும் தொடக்கத்திலும், முடிவிலும், முகவரியிலும் உள்ள வேறுபாட்டை அறிக.

3. **கேள்விகள் :**

   1. இந்தக் கடிதத்தில் விடுமுறை எதற்காக வேண்டப்படுகிறது?
   2. இதே விதம் நீ வேறு ஒரு விடுமுறைக் கடிதம் எழுது.

      காரணம் : அண்ணனுக்குத் திருமணம்.
   3. உன் ஊர்த் திருவிழாவுக்கு வரும்படி உன் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுது.

24. பள்ளிக்கூட விளையாட்டுகள்

கன்றுக்குட்டி, ஆட்டுக்குட்டி முதலியன துள்ளிக் குதித்து ஓடி விளையாடுவதைப் பார்த்திருப்பீர்கள். ஓடி விளையாடுவதில் அவைகளுக்கு இன்பம் விளைகிறது. அதேவிதம் சிறுவர்களாகிய உங்களுக்கும் விளையாட்டுகளில் விருப்பம் அதிகம் அல்லவா ?

ஓடி விளையாடும்பொழுது மனமகிழ்ச்சி உண்டாகிறது. உடல் உறுப்புக்கள் உரம் பெறுகின்றன. நல்ல பசி ஏற்படுகிறது. இரவில்

அயர்ந்து தூக்கம் வரும். ஓடி விளையாடும் பொழுது வியர்வை வெளிவருவதால் இரத்தம் சுத்தமாகும். மனத்துக்கு உற்சாகமும் சுறு சுறுப்பும் உண்டாகின்றன. இக்காரணங்களால் தற்பொழுது பாடங்கள் படிப்பதுடன் உடற் பயிற்சியும் விளையாட்டுகளும் ஒவ்வொரு பாடசாலையிலும் கற்பிக்கப்படுகின்றன.

படத்தில், பள்ளிக்கூடத்துக்கு எதிராக விளையாடுமிடம் இருப்பதைப் பார். அங்கே சிறுவர்களும் சிறுமிகளும் என்னென்ன விளையாட்டுகள் விளையாடுகிறார்கள்? பெண்கள் கயிறு தாண்டுகிறார்கள். ஒரு பெண் ஊஞ்சல் ஆடுகிறாள். பெரிய பிள்ளைகள் கால் பந்து ஆடு கிறார்கள். சிறிய பிள்ளைகள் வளையம் உருட்டு கிறார்கள்; நொண்டி ஓடுகிறார்கள். இரண்டு பிள்ளைகள் பலகையில் உட்கார்ந்துகொண்டு மேலுங் கீழும் அசையும் ஏற்ற விளையாட்டு விளையாடுகிறார்கள். இரண்டொருவர் ஏணிப் படிகளில் ஏறி, வழுக்குப் பலகை வழியாகச் சறுக்கி விளையாடுவதைக் கவனியுங்கள். நீங்களும் மாலைப்பொழுதில் இம்மாதிரி விளையாட்டுகளை விளையாடுங்கள்.

பல பாடசாலைகளில் ஆண்டு முடிவில் விளையாட்டு விழா கொண்டாடுவதுண்டு. அப்பொழுது பலவகைப் பந்தய விளையாட்டுகள் நடைபெறும். ஐம்பது கஜ ஓட்டம், நொண்டி ஓட்டம், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், கற்கள் பொறுக்குதல், நாற்காலி விளையாட்டு முதலிய போட்டிப் பந்தயங்கள் நடத்துவதைப் பார்த்திருக்கிறீர்களா? நீங்களும் இந்தப் பந்தயங்களில் சேர்ந்துகொள்ளலாம். வெற்றியடைந்தவர்களுக்குப் பரிசுகள் அளிப்பதுண்டு.

பலருடன் கூடி விளையாடுவதால் ஒருவர்க்கொருவர் அன்பும் நட்பும் வளரும்; கட்சி ஒற்றுமை, பொறுமை, நியாயம் முதலிய நற்பண்புகள் படியும்.

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

— **அமரகவி பாரதியார்**

பயிற்சி

1. **சொல்வளம் :**
இன்பம் = மகிழ்ச்சி. உரம் = வலுமை. மாலைப் பொழுது = சாயங்கால நேரம். பரிசு = இனம். நற்பண்புகள் = நல்ல குணங்கள். கனிவு = அன்பு. உடல்+பயிற்சி = உடற்பயிற்சி.

2. கேள்விகள் :

1. சிறுவர்களுக்கு விளையாட்டில் ஏன் விருப்பம் அதிகம் ?
2. விளையாட்டினால் ஏற்படும் நன்மைகள் எவை ?
3. விளையாடுமிடத்தில் எவர் எவர், என்ன என்ன விளையாட்டு விளையாடுகின்றனர் ?
4. பந்தய விளையாட்டுகள் எப்பொழுது நடத்தப் படும் ?
5. ஆறு பந்தய விளையாட்டுகளின் பெயர்களைக் கூறு.
6. பலருடன் கூடி விளையாடுவதால் ஏற்படும் நன்மை என்ன ?
7. பாரதியார் கூறும் புத்திமதி என்ன ?

3. தெரிந்துகொள் :

சிறுவன் ஓடு**கிறான்.**	சிறுமி ஓடு**கிறாள்.**
கண்ணன் படித்தான்.	கண்ணகி படித்தாள்.
அவன் வந்தான்.	அவள் வந்தாள்.

வினைச்சொற்களிலும் ஆண் பால், பெண் பால் உண்டு என்பதைக் கவனி.

25. வீரர் சிதம்பரம் பிள்ளை

நமது இந்தியா தேசம் இப்பொழுது சுதந்திர நாடாக விளங்குகிறது. நம் நாடு சுதந்திரம் பெறும்பொருட்டுப் பாடுபட்ட வீரர்கள் பலர் ஆவர். அவர்களில் கப்பலோட்டிய தமிழ் வீரர் **வ. உ. சிதம்பரம் பிள்ளை** ஒருவர்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை திருநெல்வேலி ஜில்லாவில் ஓட்டப்பிடாரம் என்ற சிற்றூரில் 1872-ம் வருடம் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் உலகநாதப் பிள்ளை. சிதம்பரம் பிள்ளை இளமையில் தமிழும் ஆங்கிலமும் கற்றுத் தேர்ச்சியடைந்தார். பிறகு இவர் தூத்துக் குடிக்குச் சென்று, அங்கே வக்கீல் தொழில் நடத்தினர்.

சிதம்பரம் பிள்ளை நல்லொழுக்கத்தில் தலை சிறந்தவர். ஆகையால், பொய் வழக்குகளை ஏற்று நடத்தமாட்டார்; உண்மை வழக்கு களையே ஏற்றுக்கொள்வார்; ஏழைகளிடம் இரக்கங்கொண்டு, அவர்களின் நன்மைக்காக மிகவும் பாடுபட்டார்; அதனுல் ஏழை மக்கள் இவரைப் புகழ்ந்து பாராட்டினுர்கள்.

அக்காலத்தில் ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்டுவந்தனர். நாம் அவர்களுக்கு அடங்கி வாழ்ந்துவந்தோம். அதனுல் நம் நாட்டு வியாபாரமும் கைத்தொழிலும் சீர்குலைந்தன; நாடு வறுமை அடைந்தது.



வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை

நம் நாடு செழிக்கவேண்டுமானால் நாம் முழுச் சுதந்திரம் பெறவேண்டும் என்று நம் நாட்டுத் தலைவர்கள் கருதினார்கள். அதற்காக அவர்கள் ஊர்கள் தோறும் சென்று, மக்களுக்குச் சுதந்திர உணர்ச்சியை எழுப்பி வந்தார்கள். நாட்டில் கிளர்ச்சி உண்டாயிற்று.

சிதம்பரம் பிள்ளையும் அக் கிளர்ச்சியில் கலந்துகொண்டார். "வியாபாரம் பெருக வேண்டுமானால் கடல் மூலம் வியாபாரம் செய்தல்வேண்டும். அதற்குக் கப்பல் தேவை யாகும். இந்தியருக்குத் தனியாகச் சொந்தக் கப்பல்கள் இருந்தால்தான் கடல் வியாபாரம் ஓங்கும்" என்று அவர் எண்ணினார். அதற்காகச் சிதம்பரம் பிள்ளை தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம் சென்று, பெரும் பொருள் திரட்டினார்.

சிதம்பரம் பிள்ளையின் முயற்சியால் இந்தியருக்குச் சொந்தமாகக் கப்பல்கள் வாங்கப் பட்டன. அவை தூத்துக்குடிக்கும் கொழும்புக் கும் இடையே சரக்குகளை ஏற்றிச் சென்று வியாபாரம் செய்தன. இதனால் ஆங்கிலே யருக்கு வருவாய் மிகவும் குறைந்தது. அவர்கள் சிதம்பரம் பிள்ளையைப் பழிவாங்கவேண்டு மென்று நினைத்தார்கள். இந்த நிலையில்

சிதம்பரம் பிள்ளை அரசாங்கத்தாரால் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

சிறைச்சாலையில் சிதம்பரம் பிள்ளை அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை. அவர் செக்கு இழுத்தார்; கருங்கல் உடைத்தார்; கேழ்வரகுக் களியை உணவாக உண்டார். என்றாலும், அவர் மனம் தளரவில்லை. 1912-ம் ஆண்டு அவர் விடுதலை அடைந்தார்.

பிறகு அவரது உடல் நலம் குறைந்தது. இதனால் அவர் ஓய்வு எடுக்க நேர்ந்தது. வீரர் சிதம்பரனார் 1936-ல் நோய்வாய்ப்பட்டுக் காலஞ் சென்றார்.

வ. உ. சிதம்பரனார் சிறந்த தேச பக்தர்; அஞ்சாநெஞ்சம் படைத்தவர்; ஆங்கிலேயரை எதிர்த்துக் **கப்பல் ஓட்டிய தமிழ் வீரர்.** இவர் ஆரம்பித்த சுதந்திரப் போரே காந்தியடிகள் காலத்தில் வெற்றிபெற்றது. இதனால்தான் நாம் இப்பொழுது சுதந்திர வாழ்வு அடைந்து மகிழ்கிறோம்.

பயிற்சி

1. சொல்வளம் :

சிறு + ஊர் = சிற்றூர். தலைசிறந்தவர் = முதன்மையாகச் சிறந்தவர். சீர்குலைந்தன = அழிவடைந்தன. வறுமை = தரித்திரம். வருவாய் = வருமானம். பழிவாங்குதல் = தீமைக்குத் தீமைசெய்தல். காலஞ் சென்றார் = இறந்தார். அஞ்சா நெஞ்சம் = பயமே அறியாத மனம்.

2. கேள்விகள் :

1. வ. உ. சிதம்பரம் பிள்ளை எந்த ஊரில் பிறந்தார் ? அவருடைய தகப்பனர் பெயர் என்ன ?
2. சிதம்பரம் பிள்ளையின் நற்பண்புகள் யாவை ?
3. அக்காலத்தில் யார் நம்மை ஆண்டுவந்தனர் ?
4. ஏன் வ. உ. சி. "கப்பல் ஓட்டிய தமிழ் வீரர்" என்று சிறப்பித்துக் கூறப்படுகிருர் ?
5. சிறைச்சாலையில் அவர் அடைந்த துன்பங்கள் மூன்று கூறுக.

3. தெரிந்துகொள் :

அவன் உண்டான்.
அவன் உண்கிருன்.
அவன் உண்பான்.

உண்டான் என்னும் வினைச்சொல் முன்பு நிகழ்ந்ததைத் தெரிவிக்கிறது. **(இறந்தகாலம்)**

உண்கிருன் என்னும் வினைச்சொல் இப்பொழுது நிகழ்கிறதைத் தெரிவிக்கிறது. **(நிகழ்காலம்)**

உண்பான் என்னும் வினைச்சொல் இனி நிகழப்போவதைத் தெரிவிக்கிறது. **(எதிர்காலம்)**

இதே விதம் கோடிட்ட இடங்களில் நிரப்பு :

	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
1.	தாண்டினன்	——	——
2.	——	உருட்டுகிருன்	——
3.	——	——	விளையாடுவார்கள்

———

26. வீரபாண்டிய கட்டபொம்மன்

(நாட்டுப் பாடல்)

[வீர பாண்டிய கட்டபொம்மன் பாஞ்சாலங் குறிச்சியை ஆண்டுவந்தார். ஆங்கிலேயக் கம்பெனிச் சேனைகள் சூழ்ந்துகொண்டபொழுது, கம்பளத்தார் படையினர் அவர்களைக் கொன்று விரட்டியடித்ததை இப் பாடல் விவரிக்கிறது.]

ராத்திரி காலத்திற் பாஞ்சை நகரத்து
நாடு கடந்து நெடுந்தூரம்
காற்றுடி போலவே விசைகொண்டு செல்வக்
கம்பளத்தார்க ளெல்லாந் திரண்டு
கும்பினிப் பாராவை முறித் திட்டார்; தடிக்
கம்புகள் போட்டங்கே யடித்திட்டார் ;
அம்புலி மான்போலே பாய்ந்திட் டார்; மத
யானைபோலே மெத்த வீறிட்டார்.

படப டென்றுதி டுதிடென்று **வீர**
பாண்டி யன்கோ பங்கொண்டு
கடக டென்று குடுகுடென்று பட்டாக்
கத்திகொண்டு வெட்டித் திடீரென்று
சோல்சர் பட்டாள முறிந்து தேமழைத்
தூற்றலினால் அங்கே நனைந்ததே ;
மேசர் பட்டாளமும் வெருண்டு தே; பரு
வெள்ளரிக்காய் போலே தகர்ந்ததே.

பயிற்சி

சொல்வளம் :

பாஞ்சை நகரம்=பாஞ்சாலங் குறிச்சி. கம்பளத்தார்= ஒருவகை இனத்தார் (கட்டபொம்மனுடைய படையினர்). கும்பினி=ஆங்கிலேயக் கம்பெனியார். பாரா= காவல். சோல்ஜர்=ஆங்கிலேயப் போர் **வீரர்கள்.** மேசர்=ஆங்கிலப் படைத்தலைவர்.

27. தொழில் செய்தல்

ஆசிரியர் : சிறுவர்களே, சிறுமிகளே! நீங்கள் பெரியவர்கள் ஆனதும் ஒவ்வொருவரும் ஒரு தொழில் செய்யவேண்டும் அல்லவா? கந்தா! நீ படித்த பிறகு என்ன தொழில் செய்ய உனக்கு ஆவல்?

கந்தன் : என் தகப்பனுரைப்போல் பயிர் வேலை பார்க்கத்தான் எனக்கு ஆசை.

முருகன் : பயிர்த்தொழில் மிகக் கடினமான வேலை அல்லவா?

கந்தன் : ஆமாம். பாடுபடாமல் பயன் கிடைக்குமா? என் தகப்பனருக்கு நிலம் இருக்கிறது. அதை உழுது பயிரிட்டால் சுதந்திரமாக வாழலாம். பிறரிடம் சென்று, கைகட்டி வேலைசெய்யவேண்டியதில்லை. பயிர்த்தொழில் நமது நாட்டுக்கு உயிர்த்தொழில். இதைக் காட்டிலும் சிறந்த தொழில் உண்டோ? முருகா! நீ என்ன தொழில் செய்யப்போகிருய்?

முருகன் : நான் தச்சுத் தொழிலை விரும்புகிறேன். அந்தத் தொழிலில் பழகி நாற்காலி, மேசை, பெட்டி, அலமாரி முதலியவைகளைத் திறமையாகச் செய்ய ஆசைப்படுகிறேன். மரத்திஞல் செய்யும் சாமான்கள் மனிதர்களுக்கு எப்பொழுதும் வேண்டும். ஆகையால், இந்தத் தொழிலில் எனக்குப் போதிய வருமானம் கிடைக்கும்; மேலும், கவலையில்லாமல் வாழலாம்.

மாணிக்கம் : என் தகப்பனர் துணி நெய்கிருர். நானும் அத்தொழிலையே செய்யப் போகிறேன். நமக்கு ஆடை தேவையல்லவா? சிதம்பரம்! உன் விருப்பத்தைச் சொல்.

சிதம்பரம் : நான் படித்து டாக்டராக வர எனக்கு எண்ணம்.

சுந்தரம் : நான் படித்து வக்கீலாகப் போகிறேன்.

வடிவேலன் : வக்கீலுக்கும் டாக்டருக்கும் படிக்க அதிகப் பணம் செலவாகுமே?

சுந்தரம் : என் தந்தையார் அதற்கு வேண்டிய பொருள் தருவதாகச் சொல்லியிருக்கிருர். சிதம்பரம்! டாக்டர் வேலை அருவருப்பானது அல்லவா? எப்பொழுதும் நோயாளிகளுடன் பழகவேண்டுமே!

சிதம்பரம் : வியாதியினுல் வருந்துகிறவர்களுக்கு மருந்து கொடுத்துக் குணப்படுத்துவது ஒரு மேன்மையான தொழில். மேலும், அதில் நல்ல வருமானமும் கிடைக்கும். அப்துல்! உன் கருத்து என்ன?

அப்துல் : என் தகப்பனுர் என்னை வியாபாரத்தில் அமர்த்தப்போகிருர். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிடைக்கும். இதுவும் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தேவையே.

கருணாகரன் : நான் நமது நாட்டைக் காக்கும் படைவீரன் ஆவேன். அதற்கு வேண்டிய உடல் வலுவும் மன உறுதியும் எனக்கு உண்டு.

ஆசிரியர்: அதுவும் கண்ணியமான தொழிலே. கமலம்! நீ படிக்கிறாயே, உன் விருப்பம் என்ன ?

கமலம் : நான் நன்றாகப் படித்த பிறகு ஆசிரியர் தொழில் பார்க்கவே எனக்கு எண்ணம். சிறுவர்களை நல்வழிப்படுத்தி, அவர்களுக்கு அறிவு உண்டாக்குவது சிறந்த தொழில் அல்லவா ? சிறு குழந்தைகளிடத்தில் பழக எனக்கு ஆசை அதிகம். வகுப்பில் முதலாக இருக்கிறாயே, சுந்தரி! உனக்கு என்ன விருப்பம்?

சுந்தரி : படித்தால் உத்தியோகம்தான் பார்க்கவேண்டுமா ? நான் வீட்டிலேயே இருந்து, வீட்டு வேலைகளைச் சரிவரச் செய்வேன்.

ஆசிரியர் : நீங்கள் கூறியவை எல்லாம் சரியே. எந்த வேலையைச் செய்தாலும், நீங்கள் உண்மையுடன் உழைத்தால் வெற்றிபெறலாம். பிறருக்கு உதவிசெய்தால் புகழ் அடையலாம். எல்லோரிடமும் அன்புடன் பழகுவதால் மகிழ்ச்சியாக வாழலாம்.

பயிற்சி

1. சொல்வளம் :

ஆவல் = ஆசை. கை கட்டி = வணங்கி. உயிர்த் தொழில் = உயிர்வாழ்வதற்கு வேண்டிய தொழில். முன்னேற்றம்=வளர்ச்சி. கண்ணியமான = கௌரவமுள்ள.

எதிர்ச் சொற்கள் :

பெரியவன் — சிறியவன்
கடினமான — எளிதான
விருப்பு — வெறுப்பு
மேன்மை — தாழ்மை
வெற்றி — தோல்வி

2. கேள்விகள் :

1. படத்தில் காட்டியுள்ள ஒன்பது தொழில்கள் யாவை?
2. பயிர்த் தொழிலின் சிறப்பு யாது?
3. டாக்டர் வேலை எவ்விதத்தில் மேன்மையானது?
4. ஆசிரியர் தொழில் எவ்விதம் சிறந்த தொழில் ஆகும்?
5. ஆசிரியர் கூறிய அறிவுரை யாது?

3. i. வகுப்புக்கு முன் வந்து பாடத்தில் கூறியுள்ள ஒவ்வொரு தொழிலைப்பற்றியும் ஒவ்வொருவர் இரண்டு நிமிடம் பேசுங்கள்.

ii. ஒவ்வொரு படத்தைப்பற்றியும் ஒரு வாக்கியம் எழுது.

28. கைத்தொழில்

1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் ;
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்.
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருப்பது உனக்கே சரியாமோ ?

2. உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது.
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ?

3. நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள் ?
குயவர் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடந்திட வேண்டுமென்றும் ?

4. கொல்லரும் தச்சரும் கூடாமல்
கூடமும் மாடமும் வீடாமோ ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
காரியம் பலவினுக் கச்சாணி.

5. வேந்தர்கள் வரிப்பணம் வாங்குவதும்
வீரர்கள் வெற்றிகள் தாங்குவதும்
மாந்தர்கள் செய்யும் எத்தொழிலும்
மண்ணிற் சிறப்பது கைத்தொழிலால்.

—அரசவைக் கவிஞர், நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

பயிற்சி

சொல்வளம் :

ஒத்துக்கொள் = ஒப்புக்கொள். உழவு = பயிர்த் தொழில். தொழில்=கைத்தொழில். விழா=திருவிழா. உடைக்கென் (உடைக்கு+என்) = ஆடைக்கு என்ன ? கல்லடி=கல்லை அடித்துச் செதுக்கும். சிற்பி=கல்லில் உருவம் அமைப்பவர். அச்சாணி = வண்டியின் அச்சாணி போன்றவர். மண்ணில் = உலகத்தில். சிறப்பது = பெருமை அடைவது.

ஒளவையார் அருளிய

கொன்றைவேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
3. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
4. எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்.
5. ஏவா மக்கள் மூவா மருந்து.
6. ஐயம் புகினும் செய்வன செய்.
7. கிட்டா தாயின் வெட்டென மற.
8. கீழோ ராயினும் தாழ வுரை.
9. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
10. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
11. சூதும் வாதும் வேதனை செய்யும்.
12. சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்.
13. தந்தைசொல் மிக்க மந்திரமில்லை.
14. தாய்சொல் துறந்தால் வாசகமில்லை.
15. திரைகட லோடியுந் திரவியந் தேடு.
16. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
17. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
18. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.
19. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
20. மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம். —ஒளவையார்

அரும்பதவுரை

1. முன் - முன்னே. அறி - காணக்கூடிய. 2. சாலவும்- மிகவும். 3. வேருடன் - (தன்) வமிசத்துடன். 4. எண் - கணித நூல். எழுத்து - இலக்கண நூல். 5. மூவா மருந்து- தேவாமிர்தம். 6. ஐயம் - பிச்சை. 7. வெட்டென - சீக்கிரத்தில். 8. உரை - பேசு. 10. சீரை - சுகத்தை. 11. வேதனை - துன்பம். 12. தேம்பி - வருந்தி. 15. திரை - அலை. 17. நுண்ணிய கருமமும் - சிறிய தொழிலையும்.

130239

1. நாளை நாளை

நாளை நாளை என்னுதே
நாளை வீணில் போக்காதே
நாளை செய்யும் காரியத்தை
நலமாய் இன்றே முடிப்பாயே.

இன்று செய்யும் காரியத்தை
நாளை என்று தள்ளாதே
நாளை எங்கே போவோமோ ?
நாளை என்ன நேரிடுமோ ?

2. மெய் : பொய்

மெய்யதைச் சொல்வா ராகில்
விளங்கிடும் மேலும் நன்மை
வையகம் அவரைக் கொள்ளும்
மனிதரில் தேவ ராவர் ;
பொய்யதைச் சொல்வா ராகில்
போசனம் அற்ப மாகும்
நொய்யவர் இவர்கள் என்று
நோக்கிடார் அறிவுள் ளோரே.

—*விவேகசிந்தாமணி*

3. தாய்மொழி வாழ்த்து

வாழ்க தமிழ்மொழி, வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே.
எங்கள் தமிழ்மொழி, எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே !

—*அமரகவி பாரதியார்*

அரும்பதவுரை

1. நாளை - நாளையதினம். நலமாய் - நன்ருய்.
2. வையகம் - உலகம். நொய்யவர் - தாழ்ந்தவர்.

RPR/1267

POONTAMIL VACHAGAM

BOOK III

Vidvan T. S. Kulandaivel Mudaliar

V. S. VENKATARAMAN & Co.
EDUCATIONAL PUBLISHERS

Sri Veda Vinayagar St.
KUMBAKONAM

144, Brodies Road
MYLAPORE :: MADRAS-4

AS. 7